★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 6 ஐ. அவ். 4 இதழ் 8

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18—2—38

## 'தேவை எனக் கருதும்வரை தேடுதல்வேட்டை தொடரும்'

### விமானத்தளபதிகூறுகிறுர்

(கொழும்பு)

''உபாலி பயணம் செய்த விமானத்துக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டு பிடிக்கும் தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. எவ்விதமான தளர்வும் அதில் ஏற்படவில்லை தேவை என்று கருதப்படும் வரை தேடுதல் தொடரும்'' என்று இலங்கை விமானப்படைத் தளபதி டிசெபெரேரா நேற்றுத் தெரிவித்தார்.

''ஒன்றுக்கு ஒன்று முரணான தகவல்கள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன ஆயினும் இப்போது இரண்டு அடிப்படையை ஆதாரமாகக் கொண்டு தேடுதலை நடாத்துவதில் ஈடுபட்டுள்ளோம்'' என்று குறிப்பிட்ட டிசெபெரேரா, மேலும் தெரிவித்தாவது:

பல்கேரிய விமானக் காப்டன் தெரிவித்த தகவலும் இந்தோனேஷியாவிலிருந்து கிடைத்த தகவலும் இந்த இரு ஆதாரங்களாகும்

''கொழும்மை அழைக்கிறோம், கொழும்பை அழைக்கிறோம்'' என்று உபாலி விமான ஓட்டியின் சமிக்ஞை ஒன்று பல்கேரிய விமானக் காப்டன் விமானத்திலிருந்து கேட்ட ஆதாரம் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பல்கேரிய

(8ம் பக்கம் பார்க்க)

## ● 5-வது நாளாகத் தொடரும் உபாலி 'மர்மம்'!

# அமெரிக்க நவீன விமானம் கொழும்பு வந்து சேர்ந்தது!

## கிழக்குக் கரைப் பகுதியில் இன்று தேடுதல்வேட்டை!!

(கொழும்பு)

தேடுதல் நடவடிக்கைகளையும், மீட்பு வேலைகளையும் மேற்கொள்வதற்கென முற்றிலும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்ட அமெரிக்க கடற்படை விசேட விமானம் இன்று காலை இலங்கையின் கிழக்குக்கரையோரப் பகுதியில் உபாலி பயணம் செய்த 'ஜெட்' விமானத்தைத் தேடிக்கண்டுபிடிப்பதில் மும்முரமாக ஈடுபடும்.

கிழக்குப்பகுதிக்கு அப்பால், 300 மைல் பிரதேசத்தில், காணாமல்போன உபாலி 'ஜெட்' விமானம் பயணம் செய்ததாகக் கருதப்படும் பாதை முழுவதும் தேடுதல் நடவடிக்கைகளில் இந்த அமெரிக்க விசேட விமானம் ஈடுபடும்.

அமெரிக்க விசேட விமானம் தேடுதல் வேட்டையில் ஈடுபடுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களுடன் நேற்று மாலை கொழும்பு வந்து சேர்ந்தது.

இந்தியக் கடற்படையின் முப்பத்தாறு விமானங்கள் அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தேடுதலை நடாத்தி வருகின்றன. பலன் கிடைக்கும் பட்சத்தில், உடன் அதுபற்றித் தெரிவிக்கப்படுமென்று இந்திய உயர் அதிகாரி நேற்று தெரிவித்தார்.

### சுமந்திராவில் தேடுதல்

வடக்கு சுமந்திராவின் தலைநகரான மெடானுக்கு கிழக்கே தேடுதலை இந்தோனேஷிய விமானங்கள் மீண்டும் நடாத்தவுள்ளன.

### நாசவேலையா?

உபாலி விமான மறைவுக்கு நாசவேலையே காரணமாக இருக்கலாம் என்று அந்த லியர் ஜெட் விமானக்கம்பனி நிபுணர்கள் பலத்த சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

லியர் ஜெட் கம்பனியாளர்கள் இவ்வாறு தெரிவித்ததை அடுத்து மலேசிய அரசு தீவிர விசாரணைகளை ஆரம்பிக்க உள்ளது. (கி)

## பஸ்எரிப்பு:இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

கந்தர் மடத்தில் இம்மாதம் 3-ம் திகதி பஸ் எரிக்கப்பட்டது சம்பந்தமாக சந்தேகத்தின் மீது இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த மேற்படி இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து விசேட பொலிஸ் குழு வொன்று நேற்று பருத்தித்துறை சென்றுள்ளது.

## இரவுநேரத்தில் தாக்குதல்; 60 பேர் பாதிப்பு, 10 பேர் கடுமை

(பச்சிலைப்பள்ளி)

இரவு நேரத்தில் கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்கள் மீது நடத்தப்பட்டுள்ள தாக்குதலில் சுமார் பத்து பேர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் சிலர் மயங்கிய நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளனர்.

முல்லைத்தீவிலிருந்து பருத்தித்துறைப் பகுதிக்கு மீன் பிடிக்க வந்தவர்களுக்கும் இப் பகுதி மீனவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள தகராறே இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமென்று கூறப்படுகின்றது.

தாக்குதலின்போது சுமார் 60 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இவர்களில் பத்து பேர் பலத்த காயமுற்றிருப்பதாகவும் கூறப்படுகின்றது

ஒரு கிழமைக்கு முன்தாக முல்லைத்தீவிலிருந்து மீனவர் கோஷ்டியொன்று பருத்தித்துறைக்கு மீன் பிடிக்க வந்தவர்கள் என்றும் இவர்களை இப் பகுதியில் ஆழியவளை, உடுத்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்க வேண்டாம் என மறித்ததாகவும் அதனால் இரு பகுதியினருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதன்பின்னர் முல்லைத்தீவு மீனவர்கள் பருத்தித்துறைப் பகுதியில் தங்கி மீன் பிடித்து வந்தார்கள் என்றும் அவர்கள் நேற்று முன்தினமிரவு முல்லைத்தீவுக்குத் திரும்பிச் செல்கையில் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவர்களைத் தாக்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. இத்தாக்குதலின்போது வள்ளங்கள், வலைகள், மோட்டார் யந்திரங்கள் போன்றவை சேதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் அடித்துக் காயப் படுத்தப்பட்டவர்களில் பலர் கடலில் தூக்கி எறியப் பட்டு அவர்கள் இரத்தக் காயங்களுடன் நீந்திக் கரை

(8-ம் பக்கம் பார்க்க)

## ''இனமக்களின் விடுதலைக்காக தமது வாழ்வை அர்ப்பணித்தவர்கள்''

### நீர்வேலி வழக்கு தனிவிசாரணை தெகுப்புரையில் சத்தியேந்திரா

[கொழும்பு]

''இந்த வழக்கு ஒரு சாதாரண வழக்கல்ல. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வழக்கு. இவ் வழக்கின் எதிரிகள் தமது இனமக்களின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் என்று நான் ஏற்கனவே இங்கு கூறியுள்ளேன். விடுதலை வேட்கையும் சுதந்திர தாகமும் என்றுமே வளர்ந்து வரக்கூடியவை இக் கொள்கைகளைக் கொண்டவர்கள் இவர்கள். அடக்கு முறைகளினல் இவர்களை ஒழித்துக் கட்டிவிட முடியாது''

இவ்வாறு நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை இரட்டைக் கொலை வழக்கின் தனியான (வொயர் டயர்) விசாரணையின் போது எதிரிகள் சார்பில் ஆஜரான கிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா தமது தொகுப்புரையை முடிக்கும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது

''1905-ல் அரவிந்த கோஷ், சக்தி பெற்று ஒரு கருத்தை வெளியிட்டிருந்தார் அவர் இவ்விதமாகக் கூறினர்.

''ஒரு கருத்து வளர்கிறது. அந்த கருத்து வளர்ந்து வருகையில் அரசுடன் மோதல் ஏற்படுகிறது. அந்த மோதலில் தியாகிகள் உருவாகின்றனர். அந்தத் தியாகிகளின் இரத்தமே அந்தக் கருத்துக்கு உரமாகி, அக்கருத்தை இல்லாமல் ஒழிக்க முற்படுவோரை உறக்கமும் நிம்மதியும் இல்லாமற் செய்துவிடும் பெரும் சக்தியாக வளர்ந்துவிடுகிறது'' என்று அரவிந்தகோஷ் கூறியிருக்கின்றர்

''ஏற்கனவேஇங்கு நான்கூறியதை இப்போதும் கூறுகின்றேன். இது ஒரு சரித்திர நிகழ்ச்சி. எனது கட்சிக்காரர்களான ஆறு பேரும், தங்களது இன மக்களின் விடுதலைக்காக விலை மதிக்க முடி

[8-ம் பக்கம் பார்க்க)

## ஹோட்டலில் ரூ.25, 000 கொள்ளை!

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதான வீதியிலுள்ள 'யாழ்டா' ஹோட்டல் நேற்று அதிகாலை உடைக்கப்பட்டு, 25,000 ரூபா ரொக்கப் பணமும், விலைஉயர்ந்த சில வெளிநாட்டு மதுபான போத்தல்களும் திருடப்பட்டிருப்பதாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஹோட்டலின் முன்கதவு உடைக்கப்பட்டு இத்திருட்டு நடைபெற்றிருப்பதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இக் கொள்ளை சம்பந்தமாக விசாரணை செய்த பொலிசார், நான்குபேரை கைதுசெய்துள்ளதுடன் சில மதுபான போத்தல்களையும் மீட்டுள்ளனர்.

## சந்நிதியான் ஓட்டோ சேவை

யாழ் நகரில் இன்று ஆரம்பம்

ரவுண், ஆஸ்பத்திரி, கச்சேரி, அண்மையிலும் பஸ், புகையிரத நிலையங்களிலும் வாடகைக்கு அமர்த்தலாம்.

சிக்கனமான பிரயாணத்திற்கு புத்தம் புதிய பஜாஜ் (சுப்பர்) டீலுக்ஸ் ஓட்டோக்கள் எல்லைக் நம்பிக்கையான மீற்றர்கள் பொருத்தப்பட்டவை.

375/12, நாவலர் றோட்,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(6230)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

GESTETNER RONEO MACHINE — கையாலும் மின் சக்தியினாலும் சுயமாக இயக்கக் கூடியது. ஓரளவு பாவிக்கப்பட்டது. நாளைசனிக் கிழமை மட்டும் நேரில் தொடர்பு கொள்ளலாம். அறை இல:18, குமரன் ரூரிஸ்ட் இன், 67, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 6237

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. "Bell Home" 418, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6227

முருகன் வீதியில் இருக்கும் காணி 4 பரப்பு, கல்வீடு, வளவும் விற்பனைக்கு உண்டு, தொடர்பு கொள்ளும் விலாசம்: அ. குமாரசாமி, C/o, கா. அப்புத்துரை, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். 6231

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் புகையிரத நிலையத்திற்கு அண்மையில் இரண்டு பரப்புக் காணி உடனடி விற்பனைக்கு உள்ளது. வியாபார ஸ்தாபனங்கள் அமைக்கவும் வீடு கட்டவும் உகந்த காணி. தொடர்பு கொள்ளவும் V. பரமநாதன், 274/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6211

நேரடியாக, புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட மிகவும் நல்ல நிலைமையிலுள்ள 5 Sri வோக்ஸ் வாகன் V W 1300 கார் விற்பனைக்குண்டு வெள்ளி சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் மாத்திரம் பார்வையிடலாம். 250/1, கண்டி வீதி, (ஸ்ரான்லிக் கல்லூரி வீதிக்கு அண்மையில்), யாழ்ப்பாணம். 6224

முதிர்ந்த மலைவேம்பு மரம் விற்பனைக்குண்டு. இணுவில் மிஷன் வைத்தியசாலை வளவில் தேவாலயத்திற்கு அருகாமையில் பார்வையிடலாம். வாங்க விரும்புவோர் இம்மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை ஆதீனக் காரியாலயப் பொருளாளரை சந்திக்கவும். 6201)

## தேவை

முழுநேரத் தொழில் நுட்பப் பிரிவில் ஆங்கில தட்டச்சு - சுருக்கெழுத்துப் பயிற்சி நெறி போதிக்க அனுபவமுள்ளவர் தேவை. இளைப்பாறியவர் விரும்பப்படுவர். சேவை வார நாட்களில் பி. ப. 2-30 தொடக்கம் 5-30 வரை. விண்ணப்ப முடிவு திகதி: 26-2-83. விண்ணப்பிக்க வேண்டிய முகவரி, அமைப்புப் போதனாசிரியர், முழுநேரத் தொழில் நுட்பப் பிரிவு, தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி. 6223

## வைத்தியம்

எவ்வளவு காலம் சென்றதானாலும் 9 விதமான மூல வியாதியையும் ஆப்ரேசன் இல்லாமல் 15 தினத்தில் சிகிச்சை செய்து மாற்றலாம். நேரில் சந்திக்கவும். M. K. M. அப்துல்லா மூல வைத்தியர், புத்தூர். 6215

## வாடகைக்கு

மாம்பழம் சந்திக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் வீடு ஒன்று வாடகைக்கு கொடுக்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 'காந்தன்ஸ்' மாம்பழம் சந்தி அரியாலை. 6214

## பயிற்சி

றேடியோ. டெலிவிசன். ஏயர்கொண்டிசனிங் எலக்றிக்கல் வயறிங், மோட்டார் மெக்கானிசம், Hotel Management, English. செய்முறைப் பயிற்சிகளுடன் மீண்டும் ஆரம்பம் 27-02-83. விபரம் நேரில், The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் றெக்கோடிங் பார் மேல்மாடி) ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 6228

## WANTED

M. B. B. S Doctor - Wanted no night duties. Applications giving details of experience and the names and addresses of two Medical referees to The Medical Centre, 415, K. K. S. Road, Jaffna. Tel: 24301. (6206)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

உ

## தர்மசாஸ்தா சஹாயம்

தர்மசாஸ்தா சஹாயத்தோடு இணுவிலில் குருகுலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

நேரம்: தினசரி. 2 மணிமுதல் 4-30 மணி வரை

இவ்வருடத்திய பாடங்கள்;

புண்யாஹவாசனம், ஸ்ரீருத்ரம் ஜடாபாடங்கள், தியானங்கள், கும்ப பூசைகள், அக்னிகார்யம், மண்டப பூஜைகள், மஹோத்சவ பத்ததி.

[பத்ததி வாசிக்கப் பழக்குவதில் அதிக கவனம் செலுத்தப்படும்]

கிரியைகள், பாவனைகள் பற்றிய விளக்கமும் பயிற்சியும் அளிக்கப்படும்.

அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்,

ஆசிரியர்: சிவஸ்ரீ தா. அரிஹரசுப்பிரமணியக் குருக்கள்

குருகுல நிர்வாகஸ்தர்கள்:
சிவஸ்ரீ சாம்பசிவசோமசபேசக் குருக்கள்,
" இ. வைத்தீஸ்வர குருக்கள்,
" வை. கருணாகரேஸ்வர குருக்கள்,
" சதா. யோகீஸ்வரகுருக்கள்,
" மு. ஜயந்திநாத சர்மா. 6213

## யாழ். கிறிஸ்தவ ஐக்கிய சங்கம் தீர்மானம்

[அரியாலை]

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்திற்கு வழங்குவதற்கென யாழ்ப்பாணக் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தினால் சேகரிக்கப்பட்ட புத்தகங்களின் ஒரு பகுதியை யாழ். மாநகர முதல்வரிடம் விரைவில் கையளிக்க நடவடிக்கை எடுப்பதென யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் பொது நிர்வாக சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ். றிம்மர் மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சங்கத்தின் வருடாந்த எழுப்புதல் கூட்டங்களை எதிர்வரும் செப்டம்பர் மாத முற்பகுதியில் நடத்துவதெனவும், பரந்தன் நவஜீவன அதிபரும், சமூக சேவையாளருமான காலஞ்சென்ற அருட்திரு ஏ. சி. தம்பிராசா அடிகளாரின் சீவியத்துக்கு நன்றி தெரிவிக்கும்ஆராதனையை யாழ். சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் அடுத்த மாதம் 12ம் திகதி ஒப்புக் கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [அ]

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## யாழ். பஸ் நிலையத்தில் மலசலகூடம், மணிக்கூட்டு வீதியில் வடிகால், முடமாவடியில் மதகு, கண்ணுபுரம் வீடமைப்பு திட்டத்தில் உப மின் நிலையத்திற்கு கியூபிக்கிள் அமைக்கும் வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 02-03-83ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

01. யாழ். பஸ் நிலையத்தில் 14 அறைகள்கொண்ட பொது மலசல கூடமும் சுற்றுமதிலும்.
02. மணிக்கூட்டு வீதியில் வடிகால்,
03. முடமாவடியில் மதகு
04. கண்ணுபுரம் வீடமைப்புத் திட்டத்தில் உப மின் நிலையத்திற்கு கியூபிக்கில்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 01-03-83-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிவரை ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 50/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடியபடிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
16-02-83. 6229

# இராமேஸ்வரம் துறையில் 2000 பிரயாணிகள்!

[மன்னார்]

தலைமன்னார்— இராமேஸ்வரம் கப்பல் மார்க்கமாக இலங்கை வருவதற்கெனச் சுமார் இரண்டாயிரம் பிரயாணிகள் இராமேஸ்வரம் துறைமுகத்தில் காத்திருக்கின்றனர்.

இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னாருக்கு வரும் கப்பலில் தினமும் 800 பேர் பிரயாணம் செய்கின்றனர்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 6-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(18—2—83)

மேடம்: வாழ்க்கை புதிர் நிறைந்ததாக இருக்கும், எடுத்த காரியம் இறுதியில் ஏமாற்றத்தை அளிக்கும், நல்லதைச் செய்யினும் வீண்பழி கேட்க நேரிடும், திடசித்தம் வேண்டும்.

இடபம்: இனிக்கப் பேசி காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள், மேடைப் பேச்சாளர்கள் பெரும் புகழ் அடைவர், ஆதாயத்திலும் அபிவிருத்தி தென்படும், ஆசிரியர் கவனம் உங்கள் பக்கம் திரும்பும்.

மிதுனம்: அதிக ஆசை வைப்பதன்மூலம் அவதிப்படுவீர்கள், குறுக்கு வழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றலாம், ஆத்திரப்படுவதால் விபரீத விளைவுகள் ஏற்படலாம், தடைகள் பல உண்டு.

கடகம்: நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராத வகையில் உங்களுக்கு ஆதரவு பெருகும், பகைத்தவர்களே உங்களைப்பாராட்டச் செய்வார்கள், புதிய வாகனம் செலுத்தப்படும்,

சிங்கம்: காரியம் யாவிலும் கைகொடுத்து உதவுவதற்கு ஒருவர் முன்வருவார், உங்கள் சீரிய நோக்கம் எங்கும் சிறப்பைத் தேடித்தரும், தானதருமங்களில் விருப்பம் மேலிடும்,

கன்னி: ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும் உணர்ச்சிகளைத் தூண்டும், எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், வேண்டாத நடவடிக்கையின் மூலம் நண்பர்களைப் பகைத்துக் கொள்வீர்கள்.

துலாம்: களஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கும் இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும், இணைந்த இதயங்கள் இன்பத்தில் மிதக்கும், திருப்திகரமான நாள்.

விருச்சிகம்: முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும், கொடுத்தவாக்கைக் காப்பாற்ற முடியாமல் திண்டாடுவீர்கள், நண்பர்களாலும் நஷ்டமடைய நேரிடும், வாழ்க்கை சோகமாய் இருக்கும்.

தனு: இலட்சியப்பாதையில் நடைபோடுவீர்கள். எடுத்த முயற்சியில் முன்னேற்றம் தென்படும், குருவிசுவாசம் குறிக்கோளைத் தேடித்தரும், பிதாவழித் தனதானியமும் சேரும்.

மகரம்: புதிய கண்டு பிடிப்புக்களில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், விஞ்ஞானத் துறையில் ஈடுபாடுடையவர்கள் பாராட்டப்படுவார்கள், தொழிலில் அந்தஸ்து உயரும்

கும்பம்: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் பயனுள்ள சந்திப்பு இன்று நிகழும், இருப்பிடமாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

மீனம்: எண்ணத்தின் தாக்குதலால் நெஞ்சத்தைப் புண்ணாக்கும். அற்ப விடயத்துக்குக்கூடப் பொல்லாங்கு கேட்க நேரிடும், தனவழியில் நட்டம் செலுத்துவீர், சீறிவரும் கோபத்தை அடக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை.

## ஒத்திவைப்பு

[அரியாலை]

இம்மாதம் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த அரியாலை மேற்கு கிராமோதய சபையின் தலைவர் தெரிவுகால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் செயலாளர் திரு. இ. சண்முகநாதன் இதனோடு இணைந்த சகல சங்கப் பிரதிநிதிகளுக்கும் அனுப்பு வைத்துள்ளார். [அ]

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

கல்கிசை தபால் அலுவலகத்தில் உதவித் தபாலதிபராகக் கடமையாற்றிய மாதகலைச் சேர்ந்த திரு ஈ ஏ ஆர் சந்திரசேகரம் இம்மாதம் தொடக்கம் பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு உதவித் தபால் அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## கிறிஸ்தவ ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

[அரியாலை]

இலங்கை கிறிஸ்தவ ஆசிரியர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்டக்கிளையின் வருடாந்தக் கூட்டம் யாழ். றிம்மர் மண்டபத்தில் தலைவர் திரு. எஸ். செபநேசன் தலைமையில் நடைபெற்றது.

புதிய வருட நிர்வாகிகள் தெரிவில் தலைவராக ஹாட்லிக்கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேலும், உபதலைவர்களாக திருவாளர்கள் எஸ். செபநேசன். சீ. ஈ ஆனந்தராஜன், கதிர்காமர், திருமதி சீ. ஈ. செல்லையா, திருமதி சி. வி. செல்லையா ஆகியோர்களும், செயலாளராகவும். பொருளாளராகவும் திரு. பி. ஈ. தனராஜசிங்கமும் உபசெயலாளராக திரு. எஸ். பி. ஜீவானந்தமும், நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் ஏ. கே. இராசேந்திரமும், யே வி. அருமைநாயகமும், திருமதிகள் யே. வி. செல்லையாவும், அருள் ராஜ்சும், திரு. எஸ் டி. பொன்னையாவும், கணக்காளராக திருமதி என். எஸ். பாலராசாவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

த.வி.கூ

## கட்டுவன் கிளை நிர்வாகிகள்

(மயிலிட்டி)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்டுவன் கிளை நிர்வாகிகள் தெரிவு எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன் துறைத்தொகுதி எம். பி.யுமான திரு அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: சு. நவரத்தினம் உபதலைவர்: பொ. அமிர்தலிங்கம் செயலாளர்: க, சிவானந்தம் உபசெயலாளர்: வீ. கோபாலசுந்தரம் பொருளாளர்: இ. இராசநாயகம் நிர்வாக உறுப்பினராக ஒன்பதுபேர் தெரிவு செய்யப்பட்டனர்

காங்கேசன்துறைத் தொகுதி கிளை அமைப்பாளரும், இளைஞர் பேரவை அமைப்பாளருமான திரு மாவை சேனாதிராசா, காங்கேசன்துறை பிரதேச அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு எஸ் சிவமகாராஜா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (மா)

# தென் அவுஸ்திரேலியாவில்

# பெரும் தீ விபத்து

## 40 பேர் பலி! 400பேர்காயம்!

### கால்நடைகள் ஆயிரக்கணக்கில் அழிவு!

கன்பரா பெப் 17

**தெற்கு அவுஸ்திரேலியாவிலும், அண்டை மாநிலமான விக்டோரியாவிலும் பெருந் தீ பரவியுள்ளது. இதனால் 40 பேர் பலியாகியுள்ளனர். 400 பேர் படுகாயமடைந்துள்ளனர். செம்மறி ஆடுகள் உட்பட ஆயிரக்கணக்கான கால்நடைகள் கருகி அழிந்துள்ளன!!!**

நேற்று முன்தினம் ஏற்பட்ட இப்பெரும் அழிவுக்கு பாதிக்கப்பட்ட இடங்களின் பற்றைக்காடுகளில் தீ பரவியதே காரணம் என்று தெரிவிக்கப் படுகின்றது.

இத் தீ விபத்தினால் தெற்கு அவுஸ்திரேலியாவே மோசமாகப்பாதிப்படைந்துள்ளது. இப்பகுதியின் தலைநகரான 'அடிலே' பல மணிக்கணக்காக தீயினால் முற்றுகையிடப்பட்டிருந்தது. இதனால் இந்தப் பிரதேசத்தில் உயிர்ச்சேதங்களுடன் சொத்துடைமைகளுக்கும் பலத்த சேதமுண்டாகியுள்ளது.

வீடுகளும், பண்ணைகளும், விளை நிலங்களும் தீக்காடாகக் காட்சியளித்தனவென்று அறிவிக்கப்பட்டது.

விக்டோரியா மாநிலமும் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதன் தலைநகரான மெல்போர்ணிலிருந்து சில மைல்கள் தொலைவில் உள்ள இடமொன்றில் தீ விபத்தினால் தொலைபேசி உட்பட ஏனைய தொலை தொடர்புச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

வீடுகள், வியாபார நிலையங்கள் உட்பட குடியிருப்புகள் பல இந்த இடத்திலும் தீக்கிரையாகின என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் பெருந் தீமேலும் பரவாதிருக்கும் பொருட்டு தீயணைப்புப்படைகள் தீவிரமாக செயலிறங்கியுள்ளன. இவற்றுக்கு உதவியாக ரோயல் அவுஸ்திரேலிய இராணுவமும் அனுப்பப்பட்டுள்ளது.

மீட்பு வேலைகளின்போது ஆயிரக்கணக்கில் குடிமக்கள் பாதிக்கப்பட்ட வலயங்களிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவுஸ்ரேலியப் பிரதம மந்திரி திரு. பிரேஸர் மீட்பு வேலைகளையும், அணைப்பு வேலைகளையும் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

அவுஸ்திரேலியக் கண்டத்தின் சரித்திரத்திலே ஒருபோதும் ஏற்படாத பெரும் அழிவு இந்தத் தீ விபத்து என்று வர்ணிக்கப்படுகின்றது. (ஓ)

### இந்தியாவில் விளையாட்டுக்கள் ஆணைக் குழு

புதுடில்லி, பெப். 17

'விளையாட்டுக்கள் ஆணைக் குழு'வொன்றை இந்திய அரசு நியமிக்க முடிவுசெய்துள்ளது. இந்தியாவில் விளையாட்டுப் போட்டிகளை வளம்படுத்துவதும், வீரர்களை ஊக்குவிப்பதுமே இந்த ஆணைக் குழுவின் நோக்கமாகும்.

ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கென்று உருவாக்கப்பட்ட 'ஆசியாட்' கிராமத்திலுள்ள குடிமனைகளை விற்பனைசெய்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை இந்த ஆணைக் குழுவுக்கு வழங்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சுமார் 20 கோடி இந்திய ரூபாய்களை இந்த விற்பனையில் பெறலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது. [கி]

### 'ஒருமண்டை ஓடு' அதன் முன்னைய முக அமைப்பை கச்சிதமாக பெறுகிறது!

#### இங்கிலாந்து பல்கலைக்கழகம் சாதனை!

லண்டன் பெப் 17

'மண்டை ஓடு' ஒன்றை வைத்து இறந்த இனந்தெரியாத ஒருவரை இனங்காணுவது உயர் மருத்துவ வட்டாரங்களிலேயே ஓரளவு சாத்தியமாகஇருந்தது! ஆனால்இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்று மண்டையோடு ஒன்றின் முன்னைய முக அமைப்பையே உருவாக்கி இறந்தவரை இலகுவில் இனங்காணச்செய்துள்ளது!!!

எகிப்திய 'மம்மி' என்று அழைக்கப்படும் பிரேதங்களைப் பாதுகாக்க கையாளப்படும் பதனிடும் முறையையே இந்த முகஅமைப்பை உருவாக்க அப் பல்கலைக்கழகமும் கையாண்டிருந்தது!

இதன்மூலம்17 வருடங்களுக்குமுன்னர்இறந்தஒருவரின் மண்டையோட்டை வைத்து அதன் முன்னைய முக அமைப்பை அப்பல்கலைக்கழகம் அண்மையில் உருவாக்கியிருந்தது!

அவ்வாறு உருவாக்கப்பட்ட அந்த முக அமைப்பைக் கொண்டு அந்த மண்டை ஓட்டுக்குரியவர் 40 வயதில் இறந்தவர்! வீடில்லாத அனாதையாக தென்இங்கிலாந்தில் திரிந்தவர் என்ற தகவல்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன!

பாழடைந்த இடமொன்றிலேயே இவரின் மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டது. பின்னர் அந்த மருத்துவ பல்கலைக்கழகத்தினர் தமது கைவண்ணத்தின் மூலம் அந்த ஓட்டின் முக அமைப்பை உருவாக்கி வெற்றிகண்டனர்!

பொலிஸ் விசாரணைகளில் துலக்கப்படாத கொலை மர்மங்கள் இத்தகைய கைவண்ணங்களால் எதிர்காலத்தில் துலங்கி விடுமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது! (ஓ)

## சிரமதானம் மூலம்

### அணைப்பாதை அமைப்பு

[புங்குடுதீவு]

புங்குடுதீவின் வடபகுதியில் கடல்நீர்உட்புகுவதால் வருடா வருடம் ஏற்படும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச்செய்கை அழிவைத்தடுப்பதற்காகவும், புங்குடுதீவு பாணாவிடைச் சிவன்கோவில் தேவஸ்தானத்திற்கு வருகைதரும் யாத்திரீகர்களுக்கு நல்ல பாதைவசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவும் புங்குடுதீவு பிரதான வீதியிலிருந்து

[6-ம் பக்கம் பார்க்க]

### இந்திய அரசுக்கு

## புதிய பொருளாதார ஆலோசனைச் சபை

புதுடில்லி, பெப். 17

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பொருளாதார ஆலோசனைச் சபையொன்றை அமைத்துள்ளார். இச்சபை இவரது பொருளாதாரத்துறை சார்ந்த நடவடிக்கைகளுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஆலோசனைகளை வழங்குவதாக இயங்கும்.

இந்திய பொருளாதாரத் திட்டமிடல் கமிஷனின் முன்னாள் தலைவர் திரு. சுக்குமால் சக்கரவர்த்தி இச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருடன் ஐந்து உறுப்பினர்கள் இச்சபையில்அடங்குகிறார்கள்.

பிரதமர் இந்திராவின் இப் பொருளாதார ஆலோசனைச் சபை, நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து தனது ஆலோசனைகளை நேரடியாக வழங்குமென்றும், இதன் பதவிக்காலம் இரண்டு வருடங்களாக இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவின் தலைசிறந்த பொருளாதாரத் திட்டமிடல் நிபுணர்களே இந்த ஆலோசனைச் சபையின் உறுப்பினர்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ளது. [கி]

### ஹோட்டல் முதலாளி கொலை வழக்கு:

## நீதிமன்றத்துக்கு வராத 1-ம் எதிரிக்காக வாதாட முடியாதா? - சட்டத்தரணி விளக்கம்

(வவுனியா)

வவுனியா அம்பலாங்கொட ஹோட்டல் முதலாளி ஆரிய ரெட்ண டீ. சில்வா கொலை வழக்கு மீண்டும் வவுனியா மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 'அமரே' என்றழைக்கப்படும ஹபுதாசந்திரிகே டொன் அமரசிங்காவோ அவரதுபிணைகாரரோ மன்றில் சமுகமாகியிருக்கவில்லை.

அவரது பிணைக்காரருக்கு மீளவும் அழைப்பாணை விடப்பட்டதோடு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இவ்வழக்கில் மூன்றும் எதிரியாக இருந்து அரசதரப்புச் சாட்சியாகமாறியிருந்த ஷெரிப் முகமட்நிலாப்டீனும் வராத காரணத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் எதிரிகளான எச் டி. அமரசிங்கா, முத்துச்சாமி ராஜ்குமார் இருவருக்கும் எதிராக ஆரியரெட்ணவைக் கொலை செய்தது, கொலை செய்ய சதிக்குற்றம் புரிந்தது போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

காணமற் போயிருந்த ஆரிய ரெட்ணவின் சடலம் கத்திக் குத்துக் காயங்களுடன் ஐந்து தினங்களின் பின் வவுனியாக் குளத்தில் மிதக்கக்காணப்பட்டதையடுத்து வவுனியாபொலிசார் இறந்தவரின் சிறிய தாய் கில்ஸி வினிதா உட்பட நால்வரைக் கைதுசெய்து வழக்குத் தாக்கல் செய்திருந்தார்கள்.

வவுனியா மாஜிஸ்ரேட் நீதிமன்றம் மூன்று எதிரிகளையும் குற்றவாளிகளாகக்கண்டுமேல் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தியிருந்தது.

அட்டோர்னி ஜெனரல் 4ம் எதிரி வினிதாவை விடுதலை செய்திருந்தார். 3ம் எதிரி முன்னரே சாட்சியாகி இருந்தார் முதலிருவருக்கும் எதிராகமட்டும் குற்றப் பத்திரம் தாக்கலாகியிருந்தது.

அரசதரப்பு திரு. ஜோ. பெரேரா, முதலாம்எதிரி தலைமறைவாகியிருப்பதாகவும்அவருக்கு எதிராக எதிரியில்லாமல் விசாரணை நடத்தவேண்டுமென்றும் நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

இதுவரை இரண்டு எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கனகமனோகரன், ஏன் இன்று முதலாம் எதிரிக்கு ஏற்படவில்லையென்று நான் அறிய விரும்புவதாகத் தெரிவித்தார்.

இதற்கு கனகமனோகரன் பதிலளிக்கையில் "இருவர்சார்பிலும் நான் ஏற்படுத்தப்பட்டு பிணை மனுவைத் தாக்கல்செய்திருந்தேன். பிணை கிடைத்த பின்னர் ஆரம்ப நிலையில் இவ்வழக்கில் எதிரிகள் இருவராலும் ஏற்படுத்தப்பட்டிருந்தேன். இவ்வழக்கில் சட்டப்படி கிடைக்கவேண்டியவாக்குமூலங்களை பொலிசார் தொடர்ந்து மறுத்து வருகின்றார்கள். முன்னொரு தடவை மன்றின் கவனத்திற்கு இவ்விடயத்தை நான் கொண்டுவர நீதிபதி பிறப்பித்த உத்தரவையும் நிறைவேற்றவில்லை. இவ்வழக்கில் தொடர்ந்தும் எதிரிகள் சமுகமாக இருப்பார்கள் என்று நான் நம்பினேன். அண்மையில் என்னை முதலாம் எதிரி சந்திக்கவில்லை அவருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

மேலும் எதிரி இல்லாதவிசாரணையில் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆஜரானால் எதிரி தனக்குச் சட்டம் தரும் சில உரிமைகளை இழக்க நேரிடும். பின்னொரு சந்தர்ப்பத்தில் அவரால் இம்மன்றுக்கு வர முடிந்து புதுவிசாரணை நடத்த விரும்பினாலும் அதனைச்சட்டம அனுமதிக்காது" என்றார்.

எதிரியின் சட்டத்தரணி சொல்வதுபோல் ஆளில்லாத விசாரணை நடைபெறவேண்டு

[6ம்-பக்கம் பார்க்க]

## "அஸாம்நிலவரங்களைசெய்தி நிறுவனங்கள் மிகைப்படுத்துகின்றன!"

### - ஆளுநர் பிரகாஷ்மல்ஹோத்ரா

புதுடில்லி, பெப். 17

"அஸாம் மாநில சம்பவங்களை வெளிமாநில, வெளிநாட்டுப் பத்திரிகைகள் மிகைப்படுத்தித் திரித்துக் கூறி வருகின்றன" என்று அஸாம ஆளுநர் திரு பிரகாஷ் மல்ஹோத்ரா கவலைதெரிவித்துள்ளார்.

ஆளுநர் மல்ஹோத்ரா மேலும் தெரிவித்ததாவது:- "அஸாமில் பிரச்னைகள் நடைபெற்றது உண்மைதான். ஆனால் சில வெளிமாநில, வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் அப்பிரச்னைகளை மிகைப்படுத்தி திரித்துக் கூறி வருகின்றன.

உயிர்ச் சேதம், பொருட்சேதமென்று அவை தவறான தகவல்களை வினை கொடுத்து வருகின்றன. அத்தகைய சேதங்கள் அஸாமில் சில பகுதிகளில் மட்டுமே சிறிய அளவில் இருந்து வருகின்றன. தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது" என்றார்.

மேகாலயாவில் இன்றுமுதல் கட்ட வாக்களிப்பு ஆரம்பமாகின்றது. அஸாமில் இரண்டாவது சுற்று வாக்களிப்பு இன்று ஆரம்பிக்கிறது

"புதிய அஸாம் மாநில அமைச்சரவை, இந்த மாநிலத்தில் எழுந்துள்ள வெளிமாநிலக்காரர்கள் குடியேற்றம் குறித்த பிரச்னைகளுக்கு நிச்சயம் தீர்வுகாணும்" என்று தாம் நம்புவதாக ஆளுநர் மல்ஹோத்ரா அறிவித்தார். [கி]

### மணிவாக்கு

நெருப்புக் குச்சிகள் ஈரமாக இருந்தால் ஆயிரம் குச்சிகளைப் பெட்டியின் புறத்தில் உரைத்தாலும் அவை தீப்பிடிக்கா. குச்சிகள் பலவற்றை வீண்படுத்துவதேயாகும் அம்முயற்சி உலகப்பற்றில் தோய்ந்து கிடக்கும் மனம் ஒரு ஈரநெருப்புக்குச்சியாகும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# "வசதிகள் குறைந்த கிளிநொச்சியில் தொலைக் காட்சியைப்பயன்படுத்த பெற்றோரையும் அனுமதியுங்கள்"

## பாடசாலை அதிபர்களுக்கு எம். பி. வேண்டுகோள்

கிளிநொச்சி)

"மாணவிகள் சுய கௌரவத்துடன் கல்வி பயில்வதற்கு அவர்களுக்கென தனித்துவமான மகளிர் கல்லூரி அத்தியாவசியமானது இதை உணர்ந்த நான் பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கலவன் பாடசாலையாக இருந்த செந்திரேசா பாடசாலையை மகளிர் கல்லூரியாக்கினேன்"

இவ்வாறு கிளிநொச்சி சென்திரேசா மகளிர் கல்லூரிக்குத் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை அன்பளிப்புச்செய்து கிளிநொச்சி எம்.பி திரு வி ஆனந்தசங்கரி உரையாற்றும் போது கூறினார்.

கல்லூரி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு ஆனந்தசங்கரி எம்.பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

"பல கஷ்டங்களுக்கு மத்தியில் இக்கல்லூரியை மகளிர் கல்லூரியாக நாம் மாற்றிய போது இப்பகுதி மாணவிகள் கலவன் பாடசாலையை நோக்கிக் கல்வி பயிலச் செல்வது வேதனைக்குரிய விஷயம். இந்த மகளிர் கல்லூரியில் சிறந்த அதிபர், ஆசிரியர்கள் உள்ளனர். கட்டிட வசதிகள், சிறந்த விளையாட்டு மைதானம் எல்லாம் ஒருங்கே அமைந்துள்ளது. சிறந்த வகையில் கல்வி புகட்டப்படுகிறது. ஒழுக்கம், பண்பாடு நல்ல முறையில் பேணப்படுகிறது.

கடந்த வருட க.பொ.த- உயர்தரப் பரீட்சையில் பதினறு பேர் தோற்றி பதின்மூன்றுபேர் சித்தியடைந்துள்ளனர் எனவே சகல வசதிகளுடன் கூடிய இந்த மகளிர்கல்லூரியை நல்லமுறையில் பயன்படுத்தப் பெற்றோர் முன்வரவேண்டும்.

"இப்பகுதியின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகளை நான் வழங்கியுள்ளேன். இப்பகுதியில் பொழுது போக்குச் சாதனங்கள் குறைவு, எனவே மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பெற்றோர்களும் இத்தொலைக் காட்சிப்பெட்டிகளைப் பயன்படுத்த அனுமதிக்குமாறும் அதிபர்களைக் கோருகிறேன்."

# நமது நோக்கு

## ஏரியல் ஷெரான்

"தீவிரவாதம், பிடிவாதம் எந்தத் துறையிலும் தீமையே விளைக்கும்"

"கொடுங்கோல், போர் என்னும் இரு பண்டைய தீமைகள் விஞ்ஞானத்தின் துர்ப்பிரயோகத்தால் அதிக தீவிரமடையும்".

இவ்விரு கருத்துக்களையும் உரைத்தவர் இந்த நூற்றுண்டு கண்ட உலகின் மிகப் புகழ்பெற்ற தத்துவமேதை பேர்ட்ரண்ட் ரசல்.

போரிலும் தீவிரவாதத்திலும் நம்பிக்கை கொண்ட நாடு இஸ்ரேல் என்பது பொது உலக அபிப்பிராயமாய்விட்டது.

ஐ.நா ஸ்தாபனம், அதன் பாதுகாப்புச்சபை இஸ்ரேலின் கட்டுக்கடங்காத்தன்மையை நெடுங்காலமாகக் கண்டித்து வருகின்றது.

இஸ்ரேல் என்ற நாடு உதயமான வரலாறு சர்ச்சைக்குரியது. அதனை இன்று ஆராயும் அவசியம் வரலாற்று நிபுணர்களுக்குரியது.

ஆனல் மத்திய கிழக்கு என்றும் போர்க்கொந்தளிப்புள்ள பிரதேசமாகவிருக்க வேண்டியதே என்று விரக்தியடையும் அளவிற்கு இச்சிறுநாடு உலக அமைதிக்கே சவாலாகத் தொடர்கிறது; இது ஒரு தலைப்பட்ட கற்றல்ல.

இந்தக் கொடூரமான பின்னணிக்கு அமெரிக்கா தனது நட்பாலும் அனுதாபத்தாலும் எவ்வளவு தூரம் தூபமிட்டு வருகிறதென்பதும் ஆராய்ச்சிக்குரிய விடயம்; அரசியல் ரீதியில் பரிகாரம் இன்னும் தென்படவில்லை.

இஸ்ரேல் லெபனுனில் உள்ள பாலஸ்தீன அகதிகள் முகாம்களில் நடத்திய பல்லாயிரக்கணக்கான படுகொலைகள் பேசாரென்று கொள்ளலாமா? ஓர் இனத்தை அழிக்கும் கொடுமையென்பது எவரும் ஒத்துக்கொள்ள வேண்டியது.

அகில உலக எதிர்ப்பையும் தேடிக் கொண்ட இந்தப் பயங்கரக்கொடுமையை இஸ்ரேலிய முன்னுள் நீதியரசர் தலைமையில் விசாரித்த கமிஷன் பாதுகாப்பமைச்சர் ஷெரானைக் குற்றவாளியாகக் கண்டிருக்கிறது.

பண்புக்கமைய உடனே தமது பதவியை விட்டுவிலக அவர் விரும்பவில்லை. பகிரங்க வெறுப்புக்குள்ளானவர் நிர்ப்பந்தத்திலேயே அரசால் விலக்கப்பட்டார்; அதேசமயம் அவர் பிரதமர் பெகினின் நட்பை இழக்கவில்லை; அமைச்சரவையில் ஒட்டிக்கொள்ள விரும்புகிறுர்.

பெகின் அரசாங்கமே ராஜினமாச் செய்யவேண்டுமென்ற கோஷம் நாட்டில் கிளம்பியிருக்கிறது போரில் பெரும் நம்பிக்கைகொண்ட இந்த ஆட்சி ரஸணுவவீரர் ஷெரானை எவ்வகையிலும் பயன்படுத்தவே விரும்பும்; அதனை ஆதரிக்கும் கோஷ்டியும் உண்டு.

எது என்னவாகுலும் எமது நாடு தவறு செய்யாது; எனவே அதனை எதிர்க்கும் எவரையும் மோதி மண்கவ்வ வைப்பது ஒரே ஒரு வழியென்றும், அவ்வித போரில் வெற்றி கண்ட வீரனே நாட்டைப் பாதுகாக்க, ஆளவல்லவன் என்றும் நம்பிக்கை கொள்ளும் இஸ்ரேல் அரசு மத்திய கிழக்கு அமைதியீனத்துக்கு மட்டுமல்ல மானிடவர்க்கத்துக்கே ஒரு அபாயமாகின்றது.

பீ. எல். ஓ.வும் அரபாத்தும் ஒழியவேண்டும்; அமெரிக்காவின் ராணுவ பாதுகாப்பை பலப்படுத்தவேண்டும் என்ற நியாயமற்ற கோஷங்கள் மோசமானவை; ஆனல் உலகுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய போர்க்குயுத்த வெறிக் கொள்கை! இதற்கு மாற்று மருந்து இன்றையதேவை.

உலகநாடுகள் ஏகோபித்து இதனைக் கண்டித்து இந்த அருமந்த நாடு நல்வழிக்குத் திரும்ப உதவவேண்டும்.

## பொறிப்பாலம்?

ஆங்கிலத்தின் அருமை பெருமை பற்றி மீண்டும் பேசப்படுகிறது.

முன்னர் பேசப்பட்ட போது எமது கருத்துக்களை மிகத் தெளிவாக எழுதியிருந்தோம்; மேல் மட்ட பிரமுகர்களுக்கு கசப்பானவை அவை.

பல்லாண்டுகளாக நாம் கடைப்பிடித்திருந்த கருத்து அது.

அகில இலங்கை ஆசிரிய சங்கம் சுமார் 30 வருடங்களுக்கு முன் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் எடுத்த அருமை பெருமையான தீர்மானம் 1956ல் பிறந்த தனிச்சிங்களச் சட்டம் உருவெடுக்க காற்றில் பறந்தது இந்த நாட்டின் தவக் குறைவு

சிங்கள மாணவர்கள் தமிழையும், தமிழ் பேசும் மாணவர்கள் சிங்களத்தையும் கட்டாய பாடமாகப் படிப்பது சகலருக்கும், தேசிய ஒற்றுமைக்கும் அவசியமானதே என்பது அந்தத் தீர்மானம்; இது செயற்படத் தொடங்க தனிச்சிங்களம் இதனை விழுங்கியது.

இலங்கையின் பெரும் கல்வி நிபுணரும், சிந்தனையாளருமான மறைந்த அதிவணக்கத்துக்குரிய பீற்றர் பிள்ளை இத் தீர்மானம் அசாத்திய மென்று கேலி செய்தது ஞாபகம்.

சிங்கள மாணவர் தமிழ் படிக்க மாட்டார்கள்: அவர்களுக்கு ஆங்கிலம் அவசியம்; தமிழ் மாணவர்களுக்கும் ஆங்கிலம் அவசியம்; எனவே இருசாராரும் ஆங்கிலத்தைப் படிப்பதால் அதுவே தேசிய ஒற்றுமைக்குப் பயன்படும்" என்றார்; அன்று அது ஐ. தே. கட்சியின் கொள்கை.

அக்கால ஆசிரிய சமூகத்தின் உண்மைத் தேசியவாதிகள்—மறைந்த ஹண்டி பேரின்பநாயகம் போன்றவர்கள் அமரர் பீற்றர் பிள்ளையின் கருத்தைப் பிட்டுக் காட்டி அதன் வெறுமையை எதிர்க்கத் தயங்கவில்லை; அதற்கு அடிப்படையான பிரமுகர் ஆட்சியை இனங்காணத் தவறவில்லை.

இன்று சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள் இவற்றைத் தாய் மொழியாகக் கொண்ட மாணவர்கள் தங்கள் கல்வியில், தேசிய உணர்வில் முன்னேறப் பல தடங்கல்கள் காணப்படுகின்றன; நாட்டின் லட்சக் கணக்கான மாணவர்களை நாம் மனதில் கொள்கின்றோம். கொழும்பு நகர மாணவர்களை மட்டுமல்ல.

ஒரு சமூகத்தவர் மற்றவர் மொழியைக் கற்பதற்குத் தடையாயிருப்பது (அ) இன்றைய இனத்துவேஷ மனப்பான்மை (ஆ) இதனைத் தூண்டும் பாடப் புத்தகங்கள். (இ) இதற்கு மேலாக தமிழுக்குக் கிடைத்த தாழ்ந்த அந்தஸ்து; ஆங்கிலமும் தேசிய மொழியானதும் கும்பலிலே கோவிந்தா என்பது அர்த்தம்.

இந்த நிலையில் ஆங்கில மொழிப்பாலம் அமைக்க முயல்வது தகைமையற்ற பொறியியலாளர்கள் தட்டித்தடறி பரீட்சை பாஸ் பண்ணி, போதிய திறமையும் அனுபவமுமில்லாத நிலையில் அமைக்கும் பொறிப்பாலம் போலாகும்; எங்களில் ஒரு பகுதி சிறிலங்காராவேசமா?

ஆங்கிலம் கல்விக்கு மிக அவசியம்; ஆனல் ஆங்கிலம் மூலம் இலங்கையிலுள்ள இனங்கள் நட்பை வளர்க்கும் வாய்ப்பு, வசதி சாத்தியம் எவ்வாறு, எக்காலத்தில் உண்டாகும்!

### அன்னதானம்
(மன்னூர்)

திருக்கேதீஸ்வரத்தில் அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் மகாசிவராத்திரி தினத்தன்று மன்னூர் கச்சேரி சிவராத்திரி மடபரிபாலன சபையினுல் தண்ணீர்ப்பந்தல் நடத்தப்படுவதுடன் அன்னதானமும் வழங்கப்படும்.

## உலகிற்கு ஞானவிளக்கேற்றியவர்

# இராமகிருஷ்ணர்

(இன்று யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஸ்ரீராமகிருஷ்ண ஜயந்தி நடைபெறுகிறது.)

**மு. இராமலிங்கம்**

இவ்வுலகில் தர்மம் நலிந்து அதர்மம் தலைதூக்கியபோதெல்லாம் மகான்கள் அவதரித்து தர்மத்தை நிலைநாட்டியுள்ளனர். சமயக் குரவர்கள் நால்வரும் இவ்வாறு அவதரித்து சைவத்தையும் தமிழையும் தமது தேவார திருவாசகங்களால் காப்பாற்றினர் என்பது வரலாறுகண்ட உண்மை. கடந்த நூற்றுண்டில் தோன்றிய அவதார புருஷர்களில் பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ண பரமஹம்ஸரே தலைசிறந்த ஞானி ஸ்ரீராமகிருஷ்ணரின் ஒப்புயர்வற்ற சிஷ்யன் சுவாமி விவேகானந்தர், இந்து சமய மகிமையையும் கோட்பாடுகளையும் மேலைநாடுகளும் அறியச் செய்தார். விவேகானந்தர் போன்றதொரு சிறந்த மாணக்கன் மூலம் உலகில் ஞானவிளக்கேற்றிச் சென்றுர் இராமகிருஷ்ணர்.

இராமகிருஷ்ணர் 1836ம் ஆண்டு மாசி மாதம் 18ம்திகதி இந்தியாவின் வங்கத்தில் காமார் புகூர் என்னும் கிராமத்தில் சந்திரமணி தேவி சமேதிராம் சட்டோபாத்தியாயர் என்போருக்கும் கனிட்ட புத்திரனுக அவதரித்தார். சட்டோபாத்தியாயரின் பக்தி மேலீட்டினுல் மகாவிஷ்ணுவே அவரது கனவில் தோன்றி. 'நான் உனக்குக் குமாரனுக அவதரிக்கப் பேசுகிறேன்' என்றருளி மறைந்தார். எனவே திருமாலின் பெயர்களுள் ஒன்றுன கதாதரர் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்டு அழைக்கப்பட்டார் இராமகிருஷ்ணர். கதாதரர் சிறுவயதிலேயே சாந்தம், அன்பு, அருள், சிவம் நிரம்பியவராகக் காணப்பட்டார். சாதி பேதம் தலைதூக்கி நின்ற அக்காலத்திலேயே அதைப் பொருட்படுத்தாது சமதர்ம நோக்குடன் சகல குழந்தைகளுடனும் சேர்ந்து விளையாடுவார் கூத்துக்களைப் பார்த்த கதாதரர் தாமும் தத்ரூபமாக நடித்து மற்றைய சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவார்.

பால்யப் பருவம் தொட்டே கதாதரருக்கு உலகப்பற்று அற்றிருந்தது. சந்நியாசி—தபசிகளைக் கண்டால் மிகக் களிப்படைந்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வார். ஜகந்நாதத்துக்கு யாத்திரை சென்ற சந்நியாசிகள் கௌபீனதாரிகளாக இருக்கக் கண்டு தானும் தமது புது வஸ்திரத்தைத் துண்டு துண்டாகக் கிழித்து உடுத்து கௌபீனதாரியானுர். அவரது ஒன்பதாவது வயதில் உபநயனமானபோது வழமைக்கு மாருக தாழ்ந்த குலப் பெண்ணிடம் பிக்ஷை பெற்று தமது சமதர்ம நோக்கத்தை நிலைநாட்டினுர். கல்கத்தாவில் ஒரு கலாசாலையில் சேர்ந்து கல்விகற்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதாயினும் கதாதரருக்கு கல்வியிலும் பார்க்க ஆத்ம விசாரத்திலேயே நாட்டம் சென்றது.

தக்ஷிணேஸ்வரத்தில் ராணி ராஸாமணி அம்மாள் கட்டுவித்த காளிகோவிலில் அர்ச்சகராகவிருந்த இவரது தமையனுர் காலமானதும் கதாதரர் அப்பணியைச் செய்யலானுர். அவர் காளிமீதுகொண்ட அபரிமிதமான பக்தியால் ஆடுவார், பாடுவார், அர்ச்சனை மலரைத் தன் தலைமேல்போடுவார். இதைக் கண்ட பெற்றோரும் மற்றோரும் இச்சித்தப்பிரமை திருமணத்தால் மாறும் என்ற எண்ணி ஐந்து வயதுச் சிறுமியாகிய சாரதா தேவியாரைத் திருமணம் செய்துவைத்தனர். ஆனல் பகவானின் தெய்வப்பித்து நாளுக்கு நாள் அதிகமாயிற்று காளிதேவி தமக்குப் பிரத்தியக்ஷமாகாத தற்குத் தன் உயிரையே மாய்க்க முற்பட்டபோது காளிதேவி தோன்றி, 'குழந்தாய், நீ சமாதானமடை; நீ கூப்பிடும்போதெல்லாம் நான் வருவேன்' என்றருளி மறைந்தார். நிர்விகல்ப சமாதியடைய பன்னிரெண்டாண்டுகள் ஊண் உறக்கமின்றி கடுந்தவம் புரிந்தார்.

[8-ம் பக்கம் பார்க்க]

### தவக்கால நற்சிந்தனை (3)



## உங்கள் நோன்பு சேவையில் வெளிப்படட்டும்

அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்து, அழுத்தி இறுக்கும் நுகத்தடிகளை இறக்கி, ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்து, சுமையானதை எல்லாம் உடைத்தெறியுங்கள். உணவு, உடை, உறையுள் எல்லோருக்கும் கிடைத்து எல்லோரும் சரிசமமாக சகோதர அன்புடன் வாழ உங்கள் சேவையை பகிர்ந்து கொள்ளுங்கள். அப்போ கடவுளின் அன்பும் ஆசியும் நீதியும் உங்களுடன் இருக்கும் கடவுள் உங்கள் மன்ருட்டை கேட்டருள்வார். உணவு உட்கொள்ளாது, கோணி உடுத்தி சாம்பலில் உட்கார்வதை விட இது எவ்வளவோ மேலானது இதுதான் இன்றைய சமூகத்தில் நாம் செய்யக் கூடிய சிறந்த நோன்பு

அருட்செல்வன் .ம.ரூபன்

### நீர்வேலி கொள்ளை, கொலைபற்றி

# "விசாரணை செய்த பொலிசாரின் நடத்தை அரசமைப்புக்கும் முரணாக இருந்தது"

## எதிரிகளின் சட்டத்தரணி சத்தியேந்திரா தொடர்ந்து தொகுப்புரை

(இ கந்தசாமி)

நீர்வேலியில் கொள்ளையடிக்கப்பட்ட பணமும் ஆயுதங்களும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் பணம் தமிழ் ஈழவிடுதலை இயக்கத்திற்குப் போய்ச்சேர்ந்துவிடும் என்றும் ஆயுதங்கள் மீண்டும் பாவிக்கப்படலாம் என்றும் பொலிசார் அச்சம் கொண்டிருந்தனர். இந்நிலையில் பலாலி கொடை இராணுவ முகாமில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளினால் பணமும் ஆயுதங்களும் கிடைப்பதாக இல்லை. ஆகவே பொலிசாரின் நடவடிக்கைகள் விசேடமாகத் தயார் செய்யப்பட்ட ஆனையிறவு இராணுவ முகாமுக்கு மாற்றப்பட்டன. அவ்வேளையில் விசேடமாகத் தயார் செய்யப்பட்ட இராணுவ முகாமில் 20 பேர் வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இக்கொள்ளை, கொலை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிசாரின் நடத்தை மிருகத்தனமாக இருந்தது மட்டுமல்ல, இலங்கையின் அரசியல் அமைப்புக்கு முரணானதாகவும் இருந்தது.

நீர்வேலி மக்கள் வங்கிக் கொள்ளை இரட்டைக்கொலை வழக்கின் தனியான விசாரணை (வொயர் டயர்)யின் போது தொகுப்புரை நிகழ்த்திய எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. என். சத்தியேந்திரா கூறினார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு சி எல். ரி. மூனமலே முன்னிலையில் நடைபெற்றுவரும் இவ்வழக்கு விசாரணையில் நேற்று முன்தினம் புதன்கிழமை திரு. சத்தியேந்திரா 2வது நாளாக தொகுப்புரை நடத்தினார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஆனையிறவு முகாமில் ஏப்ரல் மாதம் 20ம் திகதி தம்மைத் தலைகீழாகக் கட்டித்தொங்கவிடப்பட்ட பின் கீழே இறக்கி நிற்கவும் இருக்கவும் முடியாத நிலையில் தம்மை இரும்புக்கம்பியுடன் கைவிலங்கிடப்பட்டதாகவும் அங்கு வந்த இராணுவ அதிகாரி தம்மீது இரக்கப்பட்டு தாம் இருக்கக்கூடியதாக கைவிலங்கை இறக்கிவிடச்செய்ததாக 1ம் எதிரி இங்கு கூறினார். இதனைக் கற்பனை என்றுகூறிவிடமுடியாது.

இவ்வாறு கற்பனை செய்து கூறுவதானால் எந்த ஒரு மனிதருக்கும் இல்லாத கற்பனா சக்தி தேவைப்பட்டிருக்கும்.

பொலிஸ் நிர்வாகத்திற்கு எதிராக இங்கு குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர்கள் தாம் கொடூரமாக நடந்துகொண்டதை மறைப்பதற்காகவே இங்கு வந்து பொய் கூறினார்கள்.

81ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம், 8ம், 9ம் திகதிகள் சம்பவங்கள் நிறைந்த தினங்களாகும்.

### தர்க்கசிந்தனைக்கு முரண்படுகிறது

பலாலிகொடை இராணுவ முகாமுக்கு 8ம், 9ம், 10ம் திகதிகளில் தாங்கள் செல்லவில்லை என்றும் 8ம், 9ம், 10ம் திகதிகளில் 2ம் எதிரியிடம் என்ன விஷயம் பற்றி கேள்வி கேட்கப்பட்டது என்பதை தாம் மறந்துவிட்டதாகவும் பொலிஸ் அதிகாரிகள் இங்கு சாட்சியமளிக்கையில் கூறியது முற்றுமுழுதான பொய்.

தாம் கூறியது உண்மைஎன அவர்கள் கூறுவது தர்க்கரீதியான சிந்தனைக்கு முரண்படுவதால் எந்த நீதிமன்றமும் அதனை உண்மை என ஏற்றுக்கொள்ளாது.

சாட்சிகள் இப்படியாக பொய்ச்சாட்சியம் அளிக்கும் போது இதுபோன்ற ஓட்டை விழுந்துவிடுகிறது.

தமிழ்ப் பழமொழி ஒன்றை இதற்கு உதாரணங்காட்டிக் கூறுவதானால் 'முழுப்பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் செயலே இது' எனலாம். பூசனிக்காய் எதுவாக இருந்தாலும் ஹென்றி பெரேராவின் சாட்சியமே ஓட்டையையுண்டு பண்ணியுள்ளது.

நான் முன்னரும் கூறியுள்ளேன் ஏ. எஸ். பி. ஹென்றி பெரேராவின் சாட்சியமே ஜுராம்பதியின் சாட்சியத்தை பொய் என நிரூபிக்கிறது.

திரு. ஹென்றி பெரேரா மௌனமானவர் மட்டுமல்ல பலம்வாய்ந்தவரும்கூட. 9ம் திகதிதான் ஜுராம்பதி அவர்களுடன் கேள்வி கேட்பதற்கு உதவிசெய்வதற்காக இராணுவமுகாமுக்கு சென்றதாக அவர் கூறினார்.

திரு. ஜுராம்பதிக்கு உதவி செய்வதற்காக சென்ற அவர் இடையிடையே சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்காக வெளியில் சென்றதாகவும் முகாமில் நடந்தவற்றை முழுவதையும் தாம் மௌனமாக பார்த்துக்கொண்டு நின்றதாகவும் அதனை இந்த நீதிமன்றத்தை நம்பும்படியும் கேட்கிறார்.

### நம்பக்கூடியதா

திரு. பெரேரா போன்ற முதிர்ந்த அனுபவமுள்ள பொலிஸ் அதிகாரி இவ்வாறு இங்கு சாட்சியமளித்தமை தர்க்கரீதியான சிந்தனைக்கும் மனிதசிந்தனைக்கும்ஏற்புடையதாக பொருத்தமானதாக உள்ளதா என்பதை ஆராயத்தான் வேண்டும்.

நீர்வேலி வங்கிக் கொள்ளை பற்றிய விசாரணையில் ஈடுபட்டிருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் வேறு ஒருவருடனும் பேசாமல் சுத்தமானகாற்றைச் சுவாசிப்பதற்காக வெளியே போய்வந்து கொண்டிருந்தார் என்பது நம்பக்கூடிய விஷயமா?

திரு ஜுராம்பதியும் திரு. ஹென்றி பெரேராவும் சாட்சியமளிக்கையில் கூறிய சிறிய விஷயங்களை ஆராய்ந்துதான் உண்மைநிலையை அறியமுடியும் ஏனெனில்பெரிய, முக்கிய விடயங்கள் பற்றி தயாரிக்கப்பட்டவையே இங்கு சாட்சிக் கூண்டுக்கு வருகிறது.

ஏப்ரல் மாதம் 10ம் திகதிதான் 3ம் எதிரியிடம் கேள்விகள் கேட்டதாகவும் அவர் மனம்திறந்து பேசியதாகவும் குதிரையின் வாயிலிருந்து வந்ததுபோல் எல்லாவற்றையும் அவர் கூறிவிட்டார் என்றும் ஏ. எஸ். பி ஜுராம்பதி இங்கு கூறியது பொய்.

இச்சாட்சிக்கூண்டில் திரு. ஜுராம்பதி பொய் கூறியது அந்த ஒரு விடயத்தில் மட்டுமல்ல.

### ஜுராம்பதி சித்திரம்

ஏ. எஸ். பி, ஜுராம்பதி இங்கு ஒரு சித்திரம் வரைந்து காட்ட முனைந்தார். தான் 3ம் எதிரியை விசாரணைசெய்யவும் கனகசிங்கம் 2ம் எதிரியையும் லால் மெண்டிஸ் 1ம் எதிரியையும் விசாரணை செய்வதற்கு பணிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். அதுவே அவர்தயாரித்த சித்திரம்.

ஜுராம்பதியின் இந்த சித்திரம் ஒரு விசித்திரமானது.

நீதிபதி அவர்களுக்கு ஞாபகம் இருக்கும், மற்ற சந்தேகநபர்களிடமோ 1ம் எதிரியிடமோ கேள்விகேட்டீரா என்று நான் ஜுராம்பதியிடம் கேட்டபோது தாம் 1ம் எதிரியிடம் எந்தச்சந்தர்ப்பத்திலும் கேள்வி கேட்கவில்லை என்றார்.

2ம்எதிரியிடம்கேள்விகேட்டதாக ஜுராம்பதிக்கு ஏப்ரல் 8ம் திகதி என்ன கேட்கப்பட்டது என்பது முற்றாகமறந்துவிட்டது.

மூன்று விசாரணை உத்தியோகத்தர்களும் ஒவ்வொரு எதிரிகளையும் தனித்தனியே விசாரணை செய்தார்கள் எனத்தாம் கூறியதை இந்த நீதிமன்றம் நம்பும் என ஜுராம்பதி எதிர்பார்க்கிறார்.

நீதிபதி அவர்களுக்கு நினைவிருக்கும் இன்ஸ்பெக்டர் கனேகம ஜுராம்பதி மற்றும் அதிகாரிகள் தம்மைக்கேள்வி கேட்டதாக எதிரிகள் இங்கு சாட்சி கூறினார்கள்விசேடமாக 1ம் எதிரிதமது சாட்சியத்தின் போது தம்மை ஜுராம்பதி விசாரித்ததாகக் கூறியிருந்தார் தம்மைக் கேள்விகள் கேட்ட சந்தர்ப்பத்தில் கனகசிங்கமும் அங்கு இருந்தார் என்றும் 1ம் எதிரி இங்கு சாட்சியமளிக்கையில் கூறினார். திரு. கனகசிங்கமும் தனித்தனியாகவே விசாரணை நடந்தது என்ற அடிப்படையிலேயே இங்கு சாட்சியமளித்தார். திரு. கனகசிங்கமும் தாம் 1ம் எதிரியிடமும் 3ம்எதிரியிடமும் கேள்விகேட்டதாக ஒப்புக்கொள்ளவில்லை. 2ம் எதிரியையே தாம் விசாரித்ததாகக் கூறினார். சாட்சிகளிடையே உள்ள முரண்பாட்டைஎடுத்து நோக்கும்போது உண்மை எங்கே உள்ளது என்பது புலனாகிறது.

### எதையோ மறைக்கிறார்

திரு. ஜுராம்பதி உண்மை பேசவில்லை எனினும் அவர் நிச்சயமாக எதையோமறைக்க முயல்கின்றார் என்பது தெளிவு அவர் 1ம் எதிரியிடம் கேள்வி கேட்ட விஷயத்தில் ஞாபகமறதியால் அவதிப்பட்டதாகக் கருதமுடியாது அந்த விஷயத்தில் தமக்குமறதி ஏற்பட்டதாக கூறவில்லை. அவர் 1ம் எதிரியைத் தாம் விசாரிக்கவில்லை என்றே கூறினார்.

அந்த விஷயத்தில் அன்று ஏ. எஸ் பி. இப்போது எஸ். பி. யாக இருக்கும் திரு. லால் மெண்டிஸ்தமது தெளிவான உறுதியான சாட்சியத்தில் ஜுராம்பதி 1ம் எதிரியிடம்கேள்விகேட்டார் என்று கூறியிருக்கிறார்.

பொலிஸ் அதிபரான திரு. லால்மெண்டிஸ், ஜுராம்பதி 1–ம் எதிரியிடம் கேள்வி கேட்ட சமயம் திரு. கனகசிங்கமும் அங்கு இருந்தார் என மேலும், கூறியிருந்தார்.

இந்த மெதுவாகப் பேசுகின்ற அமைதியான பொலிஸ் அதிபரான லால் மெண்டிஸ் கனகசிங்கமும், ஜுராம்பதியும் 1–ம் எதிரியிடம் கேள்வி கேட்ட சமயம் முற்பகுதியில் தாம் இங்கு இருந்ததாகவும் பிற்பகுதியில் தாம் அங்கு இல்லை என்றும் கூறினார்.

### சத்தியம் செய்து விட்டு

இந்த நீதிமன்றத்தின் சாட்சிக்கூண்டிலிருந்து உண்மையையே பேசுவதாகச் சத்தியம் செய்து விட்டு 1–ம் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்டதாக லால் மெண்டிஸ் கூறிய அதே வேளையில் அவ்வாறே சத்தியம் செய்த ஜுராம்பதியும், கனகசிங்கமும் தாம் 1–ம் எதிரியிடம் கேள்வி கேட்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள்.

கடவுள் பயமுள்ள ஜுராம்பதியும் எந்தக் கடவுளுக்கும் பயப்படாத கனகசிங்கமும் இந்த நீதி மன்றத்திடமிருந்து மறைக்க முற்படுவது எதை? இவர்கள் கேள்விகேட்டதுடன் நின்றுவிடவில்லை எதிரிகள் மீது அங்கு தாக்குதலும் இடம் பெற்றிருக்கிறது அதனாலேயே கேள்வி கேட்டதை மறைக்க முற்படுகிறார்கள் என நாம் கூறுகிறோம். பலாலிகொடை இராணுவ முகாமில் தாக்குதல் நடத்தியவர்களில் முன்நின்றவர் ஜுராம்பதி. இதனால் தான் போலும் ஏ. எஸ், பி. குணசிங்க ஜுராம்பதியை இவ்விசாரணைக்குழுவின் தலைவராகக் கணித்தார்.

திரு ஜுராம்பதி குணசிங்கவின் உள்ளத்திற்குப் பொருந்தியவராக இருக்கலாம் ஆனால் நீதிபதி அவர்களே இந்த தனித்தனிப் பிரிவாக விசாரணை நடந்தது என்பது முழுவதும் பொய் என்று கூறுகிறேன்.

வாக்கு மூலம் பதியப்படுவதற்கு முன்னர் விசாரணை நடத்திய அதிகாரிகளிடம் எதுவித கலந்துரையாடலும் நடை பெறவில்லை என்ற ஜுராம்பதியின் சாட்சியம் உண்மை அல்ல.

### விநோதமான கூற்று

தெளிவாகப்பேசும் சாந்த குணமுடைய லால் மெண்டிஸ் தாம் விசாரணை நடத்திய போது எதிரிகளுடன் நல்ல சூழ்நிலையை ஏற்படுத்த முயன்றதாக ஒரு விநோதமான கூற்றை கூறினார். 1–வது எதிரியின் மனதில் தம்மைப் பற்றி நம்பிக்கையை ஏற்படுத்தத் தாம் விரும்பியதாகவும் கூறினார்.

1–ம் எதிரியிடம் இருந்து ஏதோ பெற்றுக் கொள்ளவே இந்த நம்பிக்கையை வளர்த்துக் கொண்டதாகத் தெரிகிறது. திரு. லால் மெண்டிஸ் தனக்கே உரித்தான அவசரமற்ற மெதுவான பாணியில் பலாலிகொடை இராணுவ முகாமில் மெதுவாக இந்த நம்பிக்கையை வளர்த்த வேளையில் கனகசிங்கமும், ஜுராம்பதியும் என்ன கேள்வி கேட்டார்கள் என அவருக்குத் தெரியும். அதேநேரம் அங்கிருக்க விரும்பாமலே அப்பால் சென்றுவிட்டார்.

நம்பிக்கையை வளர்க்கும் பணியில் இதுவும் ஒருபடியாக இருக்கவேண்டும். திரு. லால் மெண்டிஸ் தமது விசாரணை செய்யும் திறமையை ஓரளவு வெளிப்படுத்திக் கொண்டார். திரு லால் மெண்டிஸே இந்த விசாரணை நடத்தியவர்களுள் சிரேஷ்ட அதிகாரி. விசாரணை செய்யும்போது என்னென்ன நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதில் அவருக்கு நல்ல அறிவு இருந்தது

நீதிபதி அவர்களுக்குத்தெரியும், திரு. ஜுராம்பதி ஏப்ரல் 10–ம் திகதி 3–ம் எதிரியிடம் இருந்து எல்லாவற்றையும் வரவழைத்து விட்டதாகவும் பின் 11ம் திகதி 21 மணித்தியாலமும் பின்பு 12ம் திகதி 2மணித்தியாலமும் அவரைக் கேள்வி கேட்டதாகவும் இங்கு கூறினார். 10–ம் திகதி 3ம் எதிரி கூறியவற்றைத் தாம் நம்பியதாகவும் திருப்திப்பட்டதாகவும் கூறிய அதே ஜுராம்பதி 10, 11, 12ம் திகதியும் விசாரணை நடத்தியதாகக் கூறினார். 10–ம் திகதி 3ம் எதிரி கூறியவற்றை நம்பினால் திருப்திப்பட்டிருந்தால் என்ன விடயம பற்றி 11ம் 12ம் திகதிகளில் கேள்வி கேட்டிருப்பார். 11, 12ம் திகதி கேட்ட கேள்வி குறிப்பெடுக்கப்படாதது ஏன்?

அல்லது 11, 12ம் திகதி செய்யப்பட்டது குறிப்பெடுக்க முடியாதவைகளா?

நீதிபதி அவருக்குத் தெரியும் 2ம் எதிரியிடம் கேள்வி கேட்ட விஷயத்திலும் கனகசிங்கம் இதே நிலைமையைக் கடைப்பிடித்தார்.

கனகசிங்கம் ஏப்ரல் 8ம்திகதி முற்பகலிலும் பிற்பகலிலும் 9ம் திகதியும் 2ம் எதிரியிடம் கேட்டார் ஆனால் குறிப்பெடுக்கப்படவில்லை. 10ம் திகதியும் மீண்டும் 2ம் எதிரியிடம் கேள்வி கேட்டால் அதுவும் குறிப்பெடுக்கப் படவில்லை.

அந்த 3 நாட்களில் தாம் கேட்ட கேள்விகளில் தம்மைப் பற்றியும் திரு கனகசிங்கத்திற்கு ஞாபகம் இல்லை ஆனால் 11ம் திகதி 2ம் எதிரி தன்னிச்சையாகவே கூறிவிட்டார் என கனகசிங்கம் கூறினார். என்ன கேட்கப்பட்டது என்று ஞாபகம் இல்லை. குறிப்பெடுக்கப்படவில்லை. 11ம் திகதியே வாக்கு மூலம் பெறப்பட்டதாகக் கூறப்பட்டது.

தாங்கள் அந்த பலாலிகொடை இராணுவ முகாமில் செய்த வேலைகளை மறைக்க இந்த நீதிமன்றத்தில் வரைந்து காட்டப்பட்ட படமே இது.

நீதிபதி அவர்களே! கனகசிங்கம் 11, 12ம் திகதிகளில் 2ம் எதிரியின் வாக்கு மூலத்தைப் பதிந்துவிட்டதாகக்கூறுகிறார். ஆனால் 14ம், 15ம் திகதிகளிலும் 2ம் எதிரி கேள்வி கேட்டிருக்கிறார். அந்த இரு நாட்களிலும் 2 மணித்தியாலம் கேள்வி கேட்டார் என்று கூறினார். அத்துடன் 'கிரைம் பாட்'டை (குற்றப்புத்தகம்) காரர்களில் மாறி ஏறும்போது அந்தக்காரர்களில் ஒன்றில் கைவிட்டிருக்கலாம் என்றும் இந்த நீதிமன்றத்தை நம்பும்படி விநோதமான காரணத்தைக்கூறினர். 25 வருட அனுபவம் ஏ எஸ். பி, கனகசிங்கம் தமது இக்கூற்றை இந்த

[8–ம் பக்கம் பார்க்க].

## ரூபவாஹினியில் இன்று

மாலை 6-00 இன்றைய நிகழ்ச்சிகள் தொகுப்பு.

6-01 குழந்தைகள் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

7 00 செய்தி மஞ்சரி(தமிழ்)

7–14 நாளைய நிகழ்ச்சிகள் தொகுப்பு.

7–15 'மைன்ட் யுவர் லேங்குவேஜ்' [நகைச்சுவை தொடர் நவீனம்]

7–45 உலக சாதனைகள் (நிகழ்ச்சி–1)

8–15 செய்தி மஞ்சரி [சிங்களம்]

8–29 நாளைய நிகழ்ச்சிகள்.

8–30 பிரமுகர்கள் அறிமுகம்.

9–00 இசை நிகழ்ச்சி (சிங்களம்)

9–15 பேராசிரியர் எஸ் கே. சக்சேனவுடன் பேட்டி

9–30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்

9–15 துப்பறியும் தொடர் நவீனம்.

இப்படம் முடிந்ததும் ஒளிபரப்புச் சேவைமுடிவடையும்.

### அடிமை முகாமிலிருந்து

# மீட்கப்பட்ட இளைஞர் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

(மாவிட்டபுரம்)

அடிமை முகாமிலிருந்து வள்ளம் ஒன்றும் காப்பாற்றப்பட்டு காங்கேசன்துறை கடற்கரையில் கொண்டுவந்து விடப்பட்ட 16 வயது இளைஞர் ஒருவர் பெற்றோரை வரவழைத்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வெலிப்பன்ன பொந்துப்பிட்டிய என்னுமிடத்தைச் சேர்ந்த பெர்ணண்டோ ரஞ்சித் பிரேம்லால் என்ற இளைஞரே இவ்வாறு அடிமை முகாமிலிருந்து மீட்கப்பட்டவராவார்.

காங்கேசன்துறைக் கடற்கரையில் அழுதவண்ணம் நின்ற இவரை காங்கேசன்துறைப் பொலிசார் பிடித்து விசாரித்த சமயம் அவர் பின்வரும் சம்பவங்களை விபரித்தார்.

'4 மாதங்களுக்கு முன் இந்த இளைஞர் தமது வீட்டிலிருந்து றேடியோ திருத்தும் அலுவலாக கடைக்குச் சென்று கொண்டிருந்தார், அச்சமயம் வீதியில் இரு 'டொபி'கள் காணப்பட்டன.

'இந்த இளைஞர் அந்த டொபியை எடுத்து தின்றதும் மயக்கமடைந்து விட்டாராம்.

'பின்னர் மயக்கம் தெளிந்த சமயம் வள்ளமொன்றில் கடலில் சென்றுகொண்டிருப்பது தெரிந்தது. ஒரு சிறிய தீவுக்கு அந்த வள்ளம் சென்றடைந்ததும் இந்த இளைஞர் வள்ளத்திலிருந்து இறக்கப்பட்டு மீன்வாடிகள் அமைக்கப்பட்டிருந்த இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

'அங்கு கருவாடு காயவிடுவது தொடர்பான வேலைகளில் 4 மாதங்களாக இவர் ஈடுபடுத்தப்பட்டார். பின்னர் அங்கு கருவாடு வாங்கவந்த வள்ளம் ஒன்றில் சிலர் வந்த சமயம் இந்த இளைஞர் தமக்கு நேர்ந்ததை எடுத்துக் கூறினர்.

'தமது பெற்றோரை 4 மாதங்களாக பார்க்க முடியவில்லையென்றும் தம்மை எப்படியாவது மீட்டு பெற்றோரிடம் செல்ல உதவுமாறு அந்த வள்ளத்தில் வந்தவர்களிடம் மேற்படி இளைஞர் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

'இதையடுத்து மேற்படி வள்ளத்தில் வந்தவர்கள் இரகசியமான முறையில் இந்த இளைஞனை தமது வள்ளத்தில் ஏற்றிக்கொண்டு வந்து காங்கேசன்துறை கடற்கரையில் விட்டுச் சென்றனர்.

இந்த இளைஞர் கடற்கரையில் அழுதுகொண்டு நின்ற சமயம் காங்கேசன்துறைப் பொலிசாருக்கு தகவல் எட்டியது. காங்கேசன்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் ஜஸ்மின் இந்த இளைஞரை பிடித்து விசாரித்த சமயம் அவர் இவ்விபரங்களைத் தெரிவித்தார்.

இதனையடுத்து இந்த இளைஞரை காங்கேசன்துறைப் பொலிசார் தமது பாதுகாப்பில் வைத்து பெற்றோருக்கு தகவல் அனுப்பியதையடுத்து பெற்றோர் இங்குவந்து இளைஞரை கூட்டிச் சென்றுள்ளனர்.

மேற்படி அடிமை முகாமில் இந்த இளைஞருடன் மேலும் பல இளைஞர்கள், சிறுவர்கள் இருந்ததாகவும் இவ் இளைஞர் தெரிவித்துள்ளார்.

இந்த அடிமை முகாம் தொடர்பான புலன் விசாரணையில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (வெ)

---

## பரு. மாவட்ட நீதவான்கள்

(புலோலி)

பருத்தித்துறைமாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்றங்களின் புதியநீதிபதிகள் கடந்த திங்கட்கிழமை பதவிகளை ஏற்றனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதவானும், பருத்தித்துறை நீதிமன்ற நீதவானுக்கடமையாற்றிய திரு வி. பி. சுந்தரலிங்கமும், பருத்தித்துறை நீதிமன்ற நீதவானும், முல்லைத்தீவு ஆரம்பநீதிமன்ற நீதவானுகக் கடமையாற்றிய திரு. கணபதிப்பிள்ளையும் பதவிகளை ஏற்றுள்ளனர் (அ)

---

## ஹோட்டல்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

மெனில் எதிரி தலைமறைவாக இருக்கின்றார் என்பதை நிரூபிக்கும் பொறுப்புதன்னுடையதென்பதை அரச சட்டத்தரணி ஏற்றுக்கொண்டு, முதலாம் எதிரியின் பிணைக்காரருக்கு பிடியாணை பிறப்பிக்கக் கேட்டுக்கொண்டார்.

பிடியாணை உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் விசாரணையை மார்ச் 30ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

---

### சண்டிலிப்பாய் கொலை சம்பவம்:

## சந்தேகநபர்களைத் தேடி வலைவிரிப்பு

(மாவிட்டபுரம்)

பழயபகைமை காரணமாக இடம்பெற்றதாகக் கூறப்படும் சண்டிலிப்பாய் கொலைச்சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களைத்தேடி காங்கேசன்துறை பொலிசார் வலை விரித்துள்ளனர்.

சண்டிலிப்பாய் கல்வளை என்னுமிடத்தைச் சேர்ந்த வேலாயுதம் செல்வராஜா (35 வயது) என்பவர் பயங்கரமான முறையில் வாளால் வெட்டிக்கொலை செய்யப்பட்டிருந்தார்.

சம்பவதினம் இவரும், இவரது நண்பர்களான ஜெகதீஸ்வரன் அருட்செல்வம் ஆகியோரும் வீடொன்றுக்குச் சென்று கள் அருந்திவிட்டு தமது வீட்டுக்குத்திரும்பிக் கொண்டிருந்த சமயம் கோஷ்டியொன்றினால் வழிமறிக்கப்பட்டு பயங்கரமாகத் தாக்கப்பட்டதாகவும், ஜெகதீஸ்வரனுக்கும் வேறுசிலருக்குமிடையில் ஏற்பட்டிருந்த பழைய பகைமையே இதற்குக்காரணமெனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜெகதீஸ்வரன் பலத்த காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார். இச்சம்பவத்தின்போது தப்பித்துக்கொண்ட அருட்செல்வன் என்பவர் பொலிசில் வாக்குமூலம் அளித்துள்ளார்.

காங்கேசன்துறை பொலிசார் சந்தேகநபர்களைத் தேடிவலை விரித்துள்ளனர்.

---

## சிரமதானம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்கரையோரமாக பன்னிரண்டடி அகலத்தில் அணைப்பாதையினை சிரமதான மூலம் அமைக்கும் பணியினை புங்குடுதீவு இளந்தமிழர் மன்றம் எதிர்வரும் சனிக்கிழமைமுதல் ஆரம்பிக்கவிருக்கிறது.

நூற்றுக்குமேற்பட்ட சிரமதானிகள் பங்குபற்றும் இச் சிரமதானத்தை புங்குடுதீவு பழையதுறையடியில் வைத்து சம்பிரதாயபூர்வமாக சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் சனிக்கிழமை காலை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

நீண்டகாலத் திட்டமான ஒன்றரைமைல் நீளமான இவ் வணைப்பாதை அமைப்புவேலைகளுக்கென இளந்தமிழர் மன்றம கா. கந்தசாமி, எச். ஈ எஸ் உதயகுமார், ந. இராசதுரை, நா. பஞ்சலிங்கம். க. சிவபாலசிங்கம், ந. தனபாலசிங்கம், ம. பாலசிங்கம், க சிவதீஸ்வரன் ஆகியோர் கொண்ட சிரமதானக்குழுவை நியமித்துள்ளது.

---

## கூட்டுறவுத்துறையில் மகளிர் பங்கு

[மயிலிட்டி]

"மக்கள் ஒன்றுபட்டுஉழைக்கின்ற கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியிலும், அதன் மறுமலர்ச்சியிலும் பங்கெடுக்க மகளிர்கள் முன்வரவேண்டும். என்று தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திரு. சி. சிவமகாராசா தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் 1, 2, 3, ஆகியவற்றின் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டங்களின் ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தெல்லிப்பழை மகளிர்குழுத் தலைவி திருமதி சகுந்தேவி கந்தையா தலைமையில் இவ்விழா நடைபெற்றது. முதன்மை விருந்தினர்களாக வைத்திய கலாநிதி திரு. திருமதி தெய்வேந்திரம் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக்கல்லூரி அதிபர் திரு. செ. பொன்னம்பலம், வைத்தியகலாநிதி திருமதி குணபூபதி பொன்னம்பலம் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர். திருமதி ஜி வை. வேலுப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேட்டிகளில் பங்குபற்றியவர்களுக்கான பரிசில்களை வைத்திய கலாநிதி திருமதி தெய்வேந்திரம் வழங்கினார்.

வைத்திய கலாநிதி திரு. செ தெய்வேந்திரம் உரையாற்றுகையில் "கூட்டுறவுத்துறையில் மட்டுமல்லாது மகளிர்கள், மகளிர் திட்டங்களின் மூலமாக பல்வேறுதுறைகளிலும் நல்ல பணிகளை ஆற்றி வருகின்றமை பாராட்டப்படக்கூடியது" என்றார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. வே. நடராசா, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைச் செயலாளர்திரு சி. சிவசுப்பிரமணியம் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

---

### காங்கேசன் 3-ம் கட்டப்பிரிவில்

# சிமெந்து உற்பத்தி விரைவில் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவில் விரைவில் சிமெந்து உற்பத்தி ஆரம்பமாகவுள்ளது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவில் அபிவிருத்திவேலைகள் மிகவும் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடைந்துள்ளன. இங்கு இணைக்கப்பட்டுள்ள இயந்திரசாதனங்கள் பரீட்சார்த்தமாக இயக்கிப் பார்க்கப்பட்ட சமயம் அவை திருப்திகரமாகவும், கூடுதலான சிமெந்தை உற்பத்தி செய்யக்கூடியதாகவும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 3ம் கட்டப்பிரிவில் சிமெந்திற்கான மூலப் பொருளான கிளிங்கர் தற்போது தயாரிக்கப்பட்டுவருகிறது.

அடுத்த வாரத்திலிருந்து சிமெந்து அரைக்கும் வேலைகளும், சிமெந்து அடைக்கும் வேலைகளும் ஆரம்பமாகவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த 3ம்கட்டப்பிரிவு நவீன முறையில்அமைக்கப்பட்டுள்ளதாகவும் மணித்தியாலத்திற்கு 100 தொன் சிமெந்தை உற்பத்திசெய்யுமெனவும், இப்பிரிவிலிருந்து சிமெந்து தூசி வெளியேற மாட்டாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு மணித்தியாலத்தில் உற்பத்திசெய்யப்படும் 100 தொன் சிமெந்தை 200 பைக்கற்றுகள் வீதம் 10 லொறிகளுக்கு விநியோகிக்கமுடியுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பிரிவில் சிமெந்து உற்பத்தி ஆரம்பித்ததும் கூடுதலான சிமெந்தை பாவனைக்கு விடக்கூடியதாக இருக்குமெனவும், சிமெந்து தட்டுப்பாடு ஏற்படாதெனவும் கூறப்படுகிறது.

---

## புதிய மஞ்சம்

[சுண்டிக்குளி]

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தவேளுக்கு ஒரு மஞ்சம் அமைக்கப்படவுள்ளது. இதன் மதிப்பீடு இரண்டுலட்சம் ரூபாவாகும் இம்மஞ்சம் மூன்று வாசல்கள் உள்ளதாகும். [ப]

---

## கோப்பாய் கி. அ. சங்க கூட்டம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம மாதம் 26ம் திகதி மாலை கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இளைப்பாறிய மதுபரிபாலன அத்தியட்சகரும், கோப்பாய் கிராமோதய சபைத்தலைவரும் மேற்படி சங்கத்தலைவருமாகிய திரு கே கனகலிங்கம் தலைமை நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் புதுவருட நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் பல முக்கியமான தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

---

## "விடுதலை பெற கல்வி அவசியம்"

(மன்னார்)

மனிதன் முழு விடுதலை பெறவும், அடிமைத்தனத்தை நீக்கவும் கல்வியறிவுமுக்கியமென கிறிஸ்தவசபை தீர்மானித்துள்ளது இதனாலேயே கிறிஸ்தவ சபை நாட்டின் பல பாகங்களிலும் கல்விக்கூடத்தை அமைத்தது.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார்.

மன்னார் பட்டினசபை முன்றலில் நடைபெற்ற இவ்விழா மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்டது.

---

மிளகாய் இலைச் சுருளைத் தடுத்து
அதிக விளைச்சலைப் பெறுங்கள்

BASF
குமுலுஸ் எஸ்

நீரில் கரையக் கூடிய
80% கெந்தகம்

- நீரில் கலந்தவுடன் பால் நிறமாக மாறுகிறது.
- மிளகாய் இலைச் சுருளைத் தோற்றுவிக்கும் மைட்களை அழித்தொழிக்கிறது.
- மரக்கறி பயிர் வகைகளில் 'காளான்' தாக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது

இது ஒரு
"மேற்கு ஜெர்மனி 'BASF'"
தயாரிப்பாகும்.




குமுலுஸ் எஸ்
500 கிராம் ரூபா 13/50

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்

மக்வுட்ஸ் ஸ்தாபனம்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5

Metropolitan

# யாழ்.வை.எம்.சி.ஏ.வருடாந்த உள்ளரங்க வி. போட்டிகள்

[அரியாலை]

யாழ்ப்பாணம் வை.எம்.சி ஏ.யின் 16வது வருடாந்த உள்ளரங்க விளையாட்டு விழா இம் மாதம் 21ம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 12ம் திகதிவரை யாழ் வை. எம். சி ஏ. மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

இவ்விளையாட்டுப் போட்டியில் ஆண்கள், பெண்களுக்கான பட்மின்டன், டேபிள் டெனிஸ், கரம், செஸ், டிருவ் முதலான போட்டிகள் இடம்பெறும்.

ஈச்சமோட்டை

## இளைஞர்கழக கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை ஈச்சமோட்டை இளைஞர் கழகத்தினர் நடாத்தவுள்ளனர்.

உயிர்ப்பு ஞாயிறு விழாவை யொட்டி நடைபெறவுள்ள இச்சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 28ம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன. காப்டன் டி. ஏ. எம் குணசிங்கம் தலைமையிலான குழு இதற்கான ஒழுங்குகளைச்செய்துவருகிறது.

சாம்பியன் கிண்ணத்தை சப்இன்ஸ்பெக்டர் திரு கே யோகநாதனும் ரன்னர்ஸ்அப் வெற்றிக்கிண்ணத்தை திருமதி கௌரி சுந்தரலிங்கமும், சிறந்த விளையாட்டு வீரருக்கான பரிசைஆசிரியர் திரு க சச்சிதானந்தசிவம்யும் வழங்கியுள்ளனர்.

## மத்தியகல்லூரி பழையமாணவர் வெற்றி

(அரியாலை)

யாழ் - மத்திய கல்லூரி பழையமாணவர் குழுவிற்கும், யாழ் பரியோவான் கல்லூரியின் முதலாம் பிரிவு கிரிக்கட் குழுவிற்குமிடையே பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி பழையமாணவர் கோஷ்டி வெற்றிபெற்றது.

முதலாவது முறையாகத்துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி பழையமாணவர் கோஷ்டி 8விக்கட்டுகள் நஷ்டத்திற்கு 349ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பரியோவான் கல்லூரிக்கோஷ்டி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 200ஓட்டங்களைப்பெற்றது.

இதனைத்தொடர்ந்து இரண்டாவது முறையாகத்துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரிக் கோஷ்டி 10விக்கட்டுகளை இழந்து 173ஓட்டங்களைப் பெற்றது.

யாழ் மத்திய கல்லூரிப் பழையமாணவர்குழு தனது இரண்டாவது ஆட்டத்தில் 2விக்கட்டுகள் இழந்து 2? ஓட்டங்களைப்பெற்று ஆட்டத்தைநிறுத்திக் கொண்டது.

இன்று ஆரம்பமாகும்

## கிரிக்கெட் போட்டிகள்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்டக் கல்லூரிகளிடையே இன்று ஆரம்பமாகும் கிரிக்கெட் போட்டிகளின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரியைஎதிர்த்துமோதும். இப்போட்டி, யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ். மத்திய கல்லூரி குருநாகல் மாலிகதேவாக் கல்லூரியை எதிர்த்து மோதும். இப்போட்டி யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் மோதும். இப்போட்டி வட்டுக்கோட்டையில் நடைபெறும்.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை எதிர்த்து மோதும். இப்போட்டி பருத்தித்துறையில் நடைபெறும்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து மோதும் இப்போட்டி கொக்குவிலில் நடைபெறும். (வி)

## நிர்வாகிகள்

[அரியாலை]

யாழ். பரி. யோவான் கல்லூரி ஆசிரியர் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் சங்கத் தலைவர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது புதுவருட நிர்வாகிகள் தெரிவானார்கள் தலைவராக திரு. கே கனேசலிங்கமும், செயலாளராக திரு. டி. ஜே. தேவராசனும், பொருளாளராக திரு. என். ஜே. ஞானபொன்ராசாவும் தெரிவாகினர். நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர் எஸ் கணபதிப்பிள்ளை, என். எஸ். தனபாலன், ஜே. அமலசீலன், எஸ். சிதம்பரநாதன், திருமதி ஜோன் ஆகியோரும் என் பார்வையாளராக திரு. கே. புவனரத்தினமும் தெரிவுசெய்யப்பட்டனர். (வி)

சென். அன்ரனிஸ் விளையாட்டு மைதானம்

# பாஷையூர் மக்களுக்கு 'யோகேஸ்' பாராட்டு

(யாழ்ப்பாணம்)

'25 வருடங்களுக்கு முன்னர் குளமாக இருந்த இந்த இடம், இன்று அழகான விளையாட்டு மைதானமாக காட்சி அளிப்பதைப் பார்க்கும்போது இவ்விடத்து மக்களின் அயராத உழைப்பை பாராட்டாமல் இருக்க முடியாது.'

இவ்வாறு, யாழ்ப்பாண எம். பி. திரு. வி, யோகேஸ்வரன் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய விளையாட்டு மைதானத்தை திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது; 'பஞ்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் கீழ் எழுபத்தையாயிரம் ரூபாவை மட்டும் என்னால் பெற்று இவர்களுக்கு கொடுக்க முடிந்தது. ஆனால் இரண்டுலட்சம் ரூபாவுக்கு மேல் செலவு செய்து, இந்த விளையாட்டு மைதானம் உருவாக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத் துறைக்கு இப்பகுதி மக்கள் காட்டும் ஆர்வத்தை என்னால் பாராட்டாமல் இருக்க முடியாது' என்றார்.

இப்புதிய விளையாட்டு மைதானத்தின் திறப்பு விழாவின் போது, பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும், சென். ஜோன்ஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

இப்புதியவிளையாட்டுமைதானத்தின் திறப்பு விழாவில், யாழ் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் டாக்டர் ஜே. பி. வி. பிலிப் உட்பட பல விளையாட்டு உத்தியோகஸ்தர்கள் பிரசன்னமாக இருந்தார்கள். (வி)

## வரவேற்பு உபசாரம்

[மாவிட்டபுரம்]

25 ஆண்டு நிறைவையொட்டி வெள்ளிவிழா கொண்டாடிய வண. இம்மானுவேல் செல்வராஜா அடிகளாருக்கு அச்சுவேலி புனித சூசையப்பர் கோவிலில் பங்கு மக்களால் வரவேற்புபசாரமொன்று நடத்தப்பட்டது.

மேற்படி ஆலயத்தில் இடம்பெற்ற பலிப்பூசையை அடுத்து அடிகளாருக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டு அவரது சேவைபற்றி சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன.

இவ்வைபத்தில் ஏராளமான பொதுமக்களும், கன்னியாஸ்திரிகளும், குருமாரும் கலந்து கொண்டனர். [க]

## பழம் றோட் ஞானசோதி ச.ச.நிலையம்

கந்தர் மடம் பழம் றோட் ஞானசோதி சனசமூக நிலையத்தின் புதிய ஆண்டுக்கான நிர்வாக உத்தியோகஸ்த்தர்கள் விபரம் வருமாறு;

போஷகர்கள்: திருவாளர்கள் சி. இராசு. ஜே. பி., சட்டத்தரணி த. ஸ்ரீபதி, தே. ரெங்கன் (சட்டக்கல்லூரி மாணவர்)

தலைவர்: திரு. ஆ. குணரெத்தினம், உபதலைவர் சி. மயில்வாகனம், செயலாளர் சி. வேலாயுதபிள்ளை, உபசெயலாளர் இ. தர்மகுலசிங்கம், பொருளாளர் க. பத்மநாதன் உப-பொருளாளர் பா. குணம் விளையாட்டுச்செயலாளர் ஆ. கருணானந்தன் மகளிர் பிரிவு செல்வி கு. அமுதா நிர்வாக சபை உறுப்பினர்கள் க.இராசதுரை, பரஞ்சாமி இ.மகாலிங்கம், ந இராசரத்தினம் க.துரைசிங்கம், வ. அன்னலிங்கம்! ப. ஸ்ரீலங்கநாதன் கணக்குப்பரிசோதகர் மா. தங்கராசா.

## "அகங்காரம் அகலவேண்டும்"

[அரியாலை]

"படிப்பு, உத்தியோகம், பணம், அந்தஸ்து, செல்வாக்கு, குடும்பம், சாதி, முதலியவை பற்றிய அகங்காரம் நமது வாழ்க்கையை விட்டு அகன்று போக வேண்டும்.

இவ்வாறு இலங்கைத்திருச்சபை யாழ் மறைமாவட்ட ஆர்ச்டீக்கனும் கல்லூர் பரியாக்கோபு ஆலய சேகரக்குருவுமாகிய அருட்திரு சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் உபவாசகாலம் பற்றி வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ரூபா 14 ஆயிரம் ரொக்கம் கொள்ளை

(மாவிட்டபுரம்)

ஊரணியில் எம். மரியாம்பிள்ளை என்பவரது வீட்டின் கூரையைப்பிரித்து வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள் 14 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பணத்தைத் திருடிச் சென்றுள்ளார் என்று காங்கேசன் துறை பொலிசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மிருதங்க கச்சேரி

(மாவிட்டபுரம்)

ஏழாலையைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் திரு. எஸ். சந்திரன் 19ம் திகதி இரவு 9-45 மணியிலிருந்து 10 மணி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தாளவாத்திய கச்சேரி நிகழ்ச்சியில் மிருதங்கம் வாசிப்பார்.

## மன்னார் நீதிமன்றத்தில் பெண் முதலியார்

(மன்னார்)

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை பெண்மணி ஒருவர் முதல் தடவையாக முதலியாராகக் கடமையாற்றினார்.

மன்னார் நீதவான் திரு. உடலாகமவின் பணிப்பின் பேரிலேயே அப்பெண்மணி முதல் தடவையாகக் கடமையாற்றினார்.

மன்னார் மாவட்ட நீதிமன்றத்தின் சுருக்கெழுத்தாளரான செல்வி வேலாயுதம் என்பவரே முதல் தடவையாக முதலியாராகக் கடமையாற்றிய அந்தப் பெண்மணியாவார்.

மன்னார் மாவட்ட நீதிமன்ற முதலியார் திடீர் சுகவீனம் காரணமாக விடுமுறையில் சென்றதாலேயே செல்வி வேலாயுதம் முதலியாராகக் கடமையாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

ரீகல் (யாழ். நகர்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் 2 தினங்கள் மட்டும்
எங்க வீட்டுப் பிள்ளை

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

வெலிங்டன் (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
முரட்டுக் காளை

மனோகரா தினசரி
[யாழ் நகர்] 10-30, 2-15 6-00, 9 45.
என். டி ராமராவ், கே மாலதி, எஸ்.வி ரங்காராவ், ரேலங்கி
பாதாள பைரவி

வெலிங்டன்
[யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
18 — 20 வரை
புகுந்த வீடு

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00 9-30
Terence Hill—Ernest Borgnine in
Super Snooper Action-Comedy-Color)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
16--18
CUBA

ராணி தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
மாயா பஜார்
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்நகரில்இதுவே. கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
(கலர்)
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ராஜா (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
கர்ணன் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
துணிவே துணை

## தேவை எனக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி] விமானியின் இந்தத் தகவலை வைத்து கிழக்குக் கடலில் தேடுதலை நடாத்துகிறோம். வடக்கு சுமத்திராவில் மற்ற ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டு தேடுதல் நடாத்தப் படுகிறது''


## அந்தியேட்டி - சபிண்டீகரணக் கிரியைகள் அழைப்பு



கு. சிவகுகன்

மலர்வு: 16-11-1961 உதிர்வு: 19-8-1982

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதி
ரீ. கே. றேடர்ஸ் உரிமையாளர் திரு. கு. சிவகுகன்
அவர்கள் 19-8-1982 உலகுநீத்தமை தொடர்பான
அந்தியேட்டிக்கிரியை
18-2-83 வெள்ளிக்கிழமை முற்பகல் கீரிமலையிலும்
சபிண்டீகரணக் கிரியைகள்
19-2-83 சனிக்கிழமை முற்பகல்
இல.16/1,சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாண இல்லத்தில்
நடைபெறும்.
உறவினர்களும், நண்பர்களும் வருகை தரும்படி
வேண்டுகின்றோம்.

சி. குமாரசுவாமியும் குடும்பத்தினரும்.

ரீ. கே. றேடர்ஸ்,

5, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

(6240)



✶ வெளிநாட்டுப் பயணமா?

யாழ்ப்பாணத்திலேயே
குறைந்த கட்டணத்தில்
எந்த நாட்டிற்கும்
விரும்பிய விமானத்தில்
செல்ல

★விமான டிக்கட்டுகள்
★பிரயாண காசோலைகள்
(AMERICAN EXPRESS TRAVELLER CHEQUES)

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

மக்கிஜென் டிறவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
த. பெ. எண் 92, தொலைபேசி: 24154


## விசாரணை...

[5ம் பக்கத் தொடர்ச்சி] நீதிமன்றம் நம்பும் என எதிர்பார்க்கிறார்.

தங்கப்பதக்கம் படத்தில் வந்ததுபோல் இவருடைய மகனைப் போன்றவராகிய 1ம் எதிரியான தங்கத்துரைக்கு தாம் செய்தகாரியத்தினால் தமது மனம்பட்ட வேதனையினாலேயே தாம் அந்த கிரைம்போட்டை மறந்துவிட்டார் என்று இந்த நீதிமன்றம் நம்பவேண்டும் என திரு கனகசிங்கம் விரும்புகிறாரோ தெரியாது.

இந்த எதிரிகள் கைதுசெய்யப்படும்போது எதற்காகக் கைதுசெய்யப்படுகிறார்கள் என அவர்களுக்குக் கூறப்படவில்லை இதுபற்றி இந்த எதிரிகள் ஒவ்வொருவரும் தமது சாட்சியத்தில் கூறியுள்ளார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவர்களுக்கு கைதுசெய்வதற்கான காரணம் கூறப்பட்டது இல்லையாதலினால் குறித்து அவர்கள் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை.

எமது நாட்டின் அரசியல் அமைப்பு சட்டத்தின் 13ம் பிரிவு கைது செய்யப்படும் எவருக்கும் அவர் கைதுசெய்யப்படுவதற்கான காரணம் கூறப்பட வேண்டும் என்றும் எந்த ஒரு நபரும் சட்டத்தினால் நிறுவப்பட்ட முறையில் அன்றி கைதுசெய்யப்படக் கூடாது என்றும் கூறுகிறது.

இந்த வழக்கின் எதிரிகள் சகலரும் அரசியல் அமைப்புக்கு விரோதமாகவே கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டது மட்டும் சட்ட விரோதம் இல்லை இவர்களை விசாரணை செய்த பொலிஸ் அதிகாரிகள் சட்டத்துக்கு விரோதமாகவே விசாரணை செய்திருக்கிறார்கள்.

நீதிபதி அவர்களுக்கு ஞாபகம் இருக்கும். இங்கு சாட்சியமளித்த பொலிஸ் அதிகாரிகள் எந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் இந்த எதிரிகளை விசாரணை நடத்தினீர்கள் என நான் திருப்பித் திருப்பி கேட்டபோது பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7-ம் பிரிவின் 3-ம் உபபிரிவின் கீழ் விசாரணை நடத்தியதாகக் கூறினார்கள்.

சட்டம் இயற்றும் சபை இனிமேல் இந்தச் சட்டத்தை திருத்தினால் அன்றி இந்தச் சட்டம் இந்தஎதிரிகளுக்கு எதுவிதத்திலும் பொருந்தாது. தேவை ஏற்பட்டால் அதைத் திருத்துவதற்கு வாய்ப்பாக அதற்கான காரணத்தையும் கூறுகிறேன்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7-ம் பிரிவில் 3-ம் உபபிரிவின்படி 6-ம் பிரிவின் 3-ம் உபபிரிவின் கீழ் கைது செய்யப்பட்டவர்களை மட்டுமே விசாரணை செய்யலாம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் 7-ம் பிரிவின் 3-ம் உபபிரிவு இந்த வழக்கின் 1, 2, 3-ம் எதிரிகளுக்கு பொருந்தாது ஏனெனில் அவர்கள் 6-ம் பிரிவின்படி கைதுசெய்யப்படவில்லை கடற்படையினாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். 6-ம் பிரிவின் 1-ம் உபபிரிவு கைது செய்யும் அதிகாரத்தை பொலிஸ் அதிகாரிகளுக்கு மட்டுமே கொடுக்கிறது எந்தச் சந்தர்ப்பத்திலும் 1, 2, 3-ம் எதிரிகள் 7-ம் பிரிவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்படவில்லை. 6-ம் பிரிவின் கீழ் கைது செய்யப்படவும் இல்லை அத்துடன் இந்த எதிரிகளுக்கு தடுப்புக்காவல் உத்தரவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலைமையை வழக்காளி (அரசு) தரப்பினர் புரிந்து கொண்டிருக்க வேண்டும் அதன் காரணமாகவே 6-ம் எதிரியைக் கைது செய்தது தொடர்பாக இராணுவ காப்டன் மாயாதுன்னை நூதனமான சாட்சியம் ஒன்றை இங்கு கூறினார்.

6-ம எதிரியைக் கைது செய்தவர் இராணுவவீரர் மாயதுன்னை பொலிஸ் அதிகாரி அல்ல எனவே பயங்கரவாத தடைச்சட்டத்தின் 6-ம பிரிவும் 7-ம் பிரிவின் 3-ம உபபிரிவு ஆகியன இரது விடயத்தில் பொருந்தாது என அரசு தரப்பினர் புரிந்திருக்க வேண்டும். அதனாலேயே 6-ம் எதிரி கைது செய்யப்பட்ட போது 6-ம எதிரி வேகமாக ஓட அவரைக் கலைத்துக் கொண்டு காப்டன் மாயாதுன்னை வேகமாக ஓட அவருக்குப் பின்னால் சப் இன்ஸ்பெக்டர் வேகமாக ஓடினார் என மாயாதுன்னை இங்கு ஒரு நூதனமான சாட்சியத்தைக் கூறியிருந்தார்.

திரு. சத்தியேந்திரா வாதம் தொடர்ந்து நிகழ்ந்தது.( )

## இனமக்களின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி] யாது என்று கருதப்படும் தமது உயிரை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளனர். எமது இனத்தைச் சேர்ந்த இவர்கள் முன்னிலையில்,என்னை நான்மிகவும் சிறியவனாக மதித்து. தலை வணங்குகின்றேன்'' என்று தமது தொகுப்புரையை முடித்துக் கொண்டார்.

மேற்படி தனியான விசாரணை மீதான தீர்ப்பை நீதிபதி இம்மாதம் 22-ம் திகதி வழங்குவார்.

## ஞானவிளக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி

தோதாபுரி மகான் வந்து இவருக்கு சகல வேதாந்தஇரகசியங்களையும் உபதேசித்தார். தோதாபுரி நாற்பது வருடம் சிரமப்பட்டு அடைந்த நிர்விகல்ப சமாதியை பகவான் மூன்றே நாட்களில் அடைந்ததைக்கண்டு ஆச்சரியமடைந்து 'அப்பனே! நீ இனி எனக்கு சிஷ்யனல்ல; எனக்குச் சமானன்' என்றார். இராமகிருஷ்ணர் பல சமயங்களும் ஒரே உண்மைப் பொருளை நாடிச் செல்லும் வெவ்வேறு வழிகளே என்று சித்தாந்தப்படுத்தினார்

இராம கிருஷ்ணர் காலம் முழுவதும் அவரிடம் வருபவர்களுக்கு உபதேசம் செய்து வந்தார். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னும் பெருநோக்குடன் தான் அறிந்தவற்றையும் அனுபவித்தவற்றையும் அவரவர் பரிபக்குவ நிலைக்கேற்ப விளக்குவதிலேயே காலத்தைச் செலவிட்டார். 1885 ஆம் ஆண்டு பகவானுக்குத் தொண்டைப்புண் உண்டாயிற்று. தொண்டை கட்டிக் குரல் பாயசம் போகாத நிலையிற் வைத்தியர்களின் அறிவுரையையும் பொருட்படுத்தாது ஞானோபதேசம் செய்துகொண்டே இருந்தார். இப்படிப ரோபகாரத்திலேயே காலத்தைக்கழித்து 1886-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16ம் திகதி இரவு சமாதியிற் பிரவேசித்து பரப்பிரமத்தில் இரண்டறக் கலந்தார். வடமொழியாகிய சமஸ்கிருதத்திலோ,தாய்மொழியாகிய வங்கத்திலோ பாண்டித்தியமோ கல்வியில் தேர்ச்சியோ அற்றவராயினும் அவரது உபதேச மொழிகள் திட்ப நுட்பஞ் செறிந்த சூத்திரங்களாக அமைந்து சஞ்சலமுற்ற மனங்களுக்குச் சாந்தி அளிக்கின்றன

## கச்சதீவு உற்சவம் ரத்து

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் இந்த வருடமும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச்மாதம் 10ம் திகதி தொடக்கம் 13ம் திகதிவரை உற்சவம் நடைபெறவிருந்தது. பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னிட்டு இந்த வருடம் உற்சவம் நடைபெறமாட்டாது என்று யாழ். அரசாங்க அதிபரும் யாழ். மாவட்ட செயலாளருமான திரு தேவநேசன் நேசையா உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளார்.

## இரவு நேரத்தில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி] சேர்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

அவர்களால் கைவிடப்பட்டதாகக் கருதப்படும் படகொன்றை இப்பகுதி மீனவர்கள் கைப்பற்றி அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். மேலும் இச்சம்பவம் பற்றி பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினத்திடமும் பகுதி உதவி அரசாங்க அதிபரிடமும் புகார் செய்யப்பட்டுள்ளது.


## மரண அறிவித்தல்

### கதிரவேலு கணபதிப்பிள்ளை

நெடுந்தீவைச் சேர்ந்த கதிரவேலு கணபதிப்பிள்ளை காலமானார். இவர் கதிரவேலு பொன்னம்மாவின் இளைய மகனும், சரவணமுத்து, நாகமுத்து, தெய்வானை, தையல்அம்மை, வள்ளிஅம்மை, சண்முகம் ஆகியோரின் சகோதரரும், இலகவதி, இராசா, இரத்தினம், யோகேஸ்வரி ஆகியோரின் தந்தையும், கதிரவேலு, இராசரெத்தினம் ஆகியோரின் மாமனும், இலங்கேசரசனின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் முரசுமோட்டையில் இன்று 18-2-83 பி. ப. 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நா. தங்கவேலு

6242



## மரண அறிவித்தல்

### கா. பகவதியம்மா

இவர் வைத்திலிங்கம் காசிப்பிள்ளையின் அன்பு மனைவியும், கா. மாணிக்கவாசகர் [நூலகர், யாழ் மத்திய கல்லூரி] கா. கருணாநிதி [சவுதி அரேபியா] ஆகியோரின் அன்புத்தாயும், பத்மாவதி [மலேசியா], இந்திராணி ஆகியோரின் அன்பு மாமியும், யசோதினி, ராதிகா ஆகியோரின் பேத்தியும், காலஞ்சென்ற ஜெயலட்சுமியின் சகோதரியும், விவேகானந்தனின் [ராணி சினிமா] பெரிய தாயும், பராசக்தியின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 3-30 மணிக்கு யாழ்ப்பாணம், முதலாம் குறுக்குத்தெரு 15ம் இலக்க இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினரும் நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

6241


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ...
பெப்ரவரி மாதம் 18-ம் திகதி ... வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number
Q.D. 100236/81 Eelanaadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.